# ஒயில்

கலை இலக்கிய சமூக அறிவியற் காலாண்டிதழ்

ஆண்டு: 1 அறுவடை: 2 1987 ஜனவரி — மார்ச்

2

**கதை:**

- மனைவி அமைவதெல்லாம்
- இவன் மனிதன்

**கவிதை:**

- வேக்காட்டு விளிப்புகள்.
- ஓய்வு இலா ஊனங்கள்......
- வறுமைக்கோடு.
- வேறென்ன செய்யலாம்?
- சுதந்திரம் பெறவேண்டும்.

**கட்டுரை:**

- இலங்கையின் இனப்பிரச்சினை அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சினையே.
- மூன்றும் உலகினது விஞ்ஞான தொழில்நுட்ப அணுகுமுறைகள்.
- தமிழர் சமூக பண்பாட்டியல் வரலாற்றுத்துறையில் பேராசிரியர் வானமாமலையின் பணி.

5/-

இலக்கியம் இல்லாச் சமூகம் இயக்கம் இல்லாச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் விளைய எமது

உளம் நிறைந்த வாழ்த்துக்கள்

அன்பளிப்பு:

**THE FINANCE CO. LTD.**

**இல. 65, மத்திய வீதி - மட்டக்களப்பு.**


# வயல்

1987 ஜனவரி - மார்ச்

**வ**ட, கிழக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில் அடிக்கடி நிகழும் அனர்த்தங்களினால் அகதிகளாக்கப்பட்டு அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கும் மக்கள் அதிகம் பேர். ஆண்டவன் ஒருவேளை உணவைக்கூட நமக்கு அளித்தாலும், அதில் கூட கைவைக்கும்போது அடுத்த வீட்டில் அடுப்பு எரிகிறதா என்று அவதானிக்கவேண்டிய காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். வீட்டுக்கு வீடு வாசற்படி என்பதுபோல் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு ஆண்மகனாவது சுட்டுக்கொல்லப்பட்டிருப்பான்; அல்லது தடுப்பு முகாமொன்றில் சிறைபட்டுக்கொண்டிருப்பான்; அல்லது காணாமல் போனவர்கள் பட்டியலில் அவன் பெயர் இடம் பெற்றிருக்கும்.

மானிட இனத்தின் மாண்பும், மனித உரிமையின் மகத்துவமும் உணரப்பட்டு மனித நேயம் ஓங்கவேண்டிய காலம் மனித நேயம் அற்ற கடவுள் தொண்டு போலியாகிவிடும். கடவுள்கூட மனித உருவில்தான் மக்களுக்கு அருள்பாலித்துள்ளதாக அறிகிறோம். இந்துமத தத்துவத்தின் அடிப்படையே மனிதன் மீது மனிதன் காட்டவேண்டிய அன்பைத்தான் வலியுறுத்தி நிற்கின்றது. ஆதலால்,

## இந்துக் கோயில் நிர்வாகங்களே!

— நாட்டு நிலைமை சுமுக நிலைக்குத் திரும்பும்வரை ஆலயத் திருவிழாக்களை ஒத்திவையுங்கள்!

— ஆலயத் திருப்பணி (கட்டட நிர்மாணம்) வேலைகளைத் தற்காலிகமாகத் தள்ளிப்போடுங்கள்!

இவைகளுக்குச் செலவிட உத்தேசித்துள்ள பணத்தையும்; ஏனைய ஆலய வருமானங்களையும் பரிதவிக்கும் நமது மக்களின் வயிற்றில் பால் வார்க்காவிட்டாலும், ஒரு வேளைக் கஞ்சியாவது ஊற்றுவதற்கு உபயோகப்படுத்துங்கள்!

சிந்தியுங்கள் ! செயற்படுங்கள் !

**இது ஓர் இதயபூர்வமான வேண்டுகோள்**

ஆசிரியர் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 - 01 - 87

## கொக்கட்டிச்சோலையில் கொலை பட்டோர்க் கஞ்சலி

வானத்தில் இரும்புப்
பருந்துகள் இரைந்தன!
வளைந்த கதிர்கள்
விளைந்த வயல்களில்
வீழ்ந்த உருவங்கள்
விரைவாய் நகர்ந்தன !
கையில் ஏந்திய
கரிய கருவிகள்
கனலைக் கக்கின !
கொக்கட்டிச் சோலையோர்
கொலைக்களச் சோலையாயிற்று !
நேற்று எம்மோடு இருந்த பலர்
இன்றுஎம் நினைவுகளாய் எஞ்சினர்.
கண்ணீரைத் துடைத்து
கைகளை இறுக்கி
ஒன்றுசொல்வோம் !
மனித வதைகள்
வென்றதும் இல்லை !
மானிட நேயம்
தோற்றதும் இல்லை !
அஞ்சலிக்கின்றோம் ! நண்பர்களே !
உங்கள் நினைவுகளை
அஞ்சலிக்கின்றோம் !

"வயல்"
ஆசிரியர்குழு



# வயல் வெளியீடு

மட்டக்களப்பில் இருந்து மீண்டும் ஒரு இலக்கியச் சிறு சஞ்சிகை என்ற வகையில் வெளிவரும் வயலின் முதலாவது இதழ் வெளியீட்டு வைபவம் அடக்கமான முறையில் கடந்த 1986-11-30ம் திகதி அன்று வெளியிடப்பட்டது. வெளியீட்டு வைபவம் மட்டக்களப்பு விபுலானந்தா வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரியில் இடம்பெற்றது. மட்டக்களப்பின் முதுபெரும் தமிழறிஞர் மகாவித்துவான் F. X. C. நடராசா, மட்டக்களப்பு அர்ச் மிக்கேல் கல்லூரி அதிபர் வித்துவான் இ. கமலநாதன், மட்டக்களப்பு மாவட்ட கலாச்சார உத்தியோகஸ்தர் திரு எஸ். எதிர்மனசிங்கம் ஆகியோர் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக்கு திரு. எஸ். வசந்தராசபிள்ளையவர்கள் தலைமைதாங்கினர்.

''வயல்'' முதற் பிரதியை வெளியிட்டு வைத்த மகா வித்துவான் F. X. C. நடராசா அவர்கள் சஞ்சிகையின் பெயர் பற்றியும் மொழி இலக்கணம் தொடர்பாயும் சில கருத்துக்களை கூறி முதல் இதழை வெளியிட்டுவைத்தார். சஞ்சிகையின் 'வயல்' என்ற பெயர் பொருத்தமானதாகவும் கிழக்கிலங்கையை சிறப்பாய் பிரதிபலிப்பதாய் கூறிய மகாவித்துவான் அவர்கள் வடமொழி எழுத்துக்களை தமிழ் மொழி ஆக்கங்களில் பயன்படுத்தி தமிழ் எழுத்துக்களின் தொகையைக் கூட்டவேண்டாம் எனக் கூறினர்.

மகாவித்துவான் F. X. C. நடராசாவைக் தொடர்ந்து விமர்சன உரை நிகழ்த்திய வித்துவான் இ. கமலநாதன் அவர்கள் சஞ்சிகையில் வெளிவந்த சகல ஆக்கங்கள் பற்றிய தனது விமர்சன நோக்குகளை தொகுத்து உரைத்தார். தான் ஒரு விமர்சகனல்ல எனத் தொடங்கி விமர்சனம் நிகழ்த்திய வித்துவான் கமலநாதன் அவர்கள் சஞ்சிகையில் வெளிவந்த கதை, கவிதைகளை சிறப்பானவைகள் என்ற தொனியில் விமர்சனம் செய்தார். சஞ்சிகையின் கட்டுரைகளைப் பற்றியும் தன் விமர்சனங்களை வித்துவான் கமலநாதன் அவர்கள் விளக்கமாக முன்வைத்தார் தனது விமர்சனங்களை தொகுத்துக்கூறும் பொழுது வயல் சஞ்சிகை தான் வெளிவரும் காலப்பாதிப்புக்களை உட்கொண்டு இருப்பது போற்றத்தக்கது எனக் கூறி தன் விமர்சனத்தை முடித்தார்.

வித்துவான் இ. கமலநாதன் அவர்களைத் தொடர்ந்து வயல் சஞ்சிகையை விமர்சனம் செய்ய முன்வந்த மட்டக்களப்பு மாவட்டக் கலாச்சார உத்தியோகஸ்தர் திரு. எஸ். எதிர்மனசிங்கம் அவர்கள் இதழின் ஆக்கங்கள் பற்றிய தனது விமர்சனங்களை உடன்பாட்டு நிலையிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாட்டு நிலையிலும் முன்வைத்தார். கதைகள், கவிதைகள் சிறப்பானவை என விமர்சித்த திரு. எஸ். எதிர்மனசிங்கம் அவர்கள் 'மேத்தாக்களும் புறநானூறும்' என்ற திரு. க. யோகநாதன் அவர்கள் எழுதிய கட்டுரை தரும் செய்திகள் ஏற்கமுடியாதவைகள் என வாதிட்டார். புலவர்கள் கற்பனையில் கூறிய புறநானூற்றுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு சங்க காலச் சமூகம் பற்றிய தீர்மானங்களை செய்யமுடியாது என்ற வகையில் திரு. எதிர்மனசிங்கம் அவர்களின் விமர்சனம் அமைந்தது.

வெளியீட்டு உரை, விமர்சன உரைகளைத் தொடர்ந்து வயல் ஆசிரியர் குழுவின் சார்பில் சாருமதி அவர்கள் பதிலுரை வழங்கினார். பதிலுரை வழங்க வந்த சாருமதி அவர்கள் தமிழில் சிறு சஞ்சிகை நடத்துவதில் உள்ள சிரமங்களை எடுத்துக்கூறி அதிலும் மட்டக்களப்பில் ஓர் இலக்கிய சஞ்சிகை நடத்துவதில் உள்ள இடர்பாடுகளை விளக்கினார். குறிப்பாக கிழக்கிலங்கையில் நவீன தமிழ் இலக்கியம் பற்றிப் போதிய பிரக்ஞை இல்லாது இருப்பது விசனப்படத்தக்கது என்றார். மேலும் 'வயல்' ஒன்று பொருட்டு முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு விபரமான பதில்களை அளித்தார்.

தற்கால தமிழ்மொழி வழக்கில் தமிழ் எழுத்துக்களால் குறித்துக் காட்ட முடியாத ஒலியமைப்பு உடைய சொற்களை பயன்படுத்த வேண்டி வரும்பொழுது தமிழ் மொழியில் வேறு ஏற்பாடுகள் இல்லாத பொழுது வடமொழி எழுத்துக்களை பயன்படுத்துதல் தவிர்க்க இயலாது என்றார். மேலும் சங்க இலக்கியம் தரும் செய்திகளை நம் மனம் போனபோக்கில் நமக்குப் பிடித்தமானவற்றை உண்மையானவை என்றும், நமக்குப் பிடிக்காதவற்றை பொய்யானவை என்றும் அகவயமாய் முடிவுகூறல் ஆரோக்கியமான இலக்கிய அணுகுமுறையல்ல எனக் கூறினார். சங்ககால தமிழக வரலாற்றை வலிந்து பொற்காலமாக காட்ட முனையும் சார்பு மனோ பாவம் நீக்கப்பட்டு இலக்கிய வரலாற்றை நடுநிலை மனோபாவத்துடன் அணுகவேண்டும் எனவும் கூறினார்.

சாருமதி அவர்களின் பதிலுரையோடு நன்றியுரை கூறவந்த 'வயல்' நிர்வாக ஆசிரியர் திரு. என். சிவலிங்கேஸ்வரன் எனக்கு இந்த இடத்தில் தமிழைப் பேசவே பயமாக இருக்கின்றது என்ற நகைச்சுவைத் தொடக்கத்தோடு 'வயல்' வெளியீட்டு வைபவத்திற்கும் பங்காற்றிய சகலருக்கும் நன்றிகளைக் கூறினார். நிர்வாக ஆசிரியர் அவர்களின் நன்றியுரையோடு அடக்கமான 'வயல்' முதற் பிரதியின் வெளியீட்டு வைபவம் இனிதுற முடிந்தது.

தொகுப்பு: **"வயலோன்"**



# இலங்கையின் இனப்பிரச்சினை அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சினையே

-(அழகு. குணசீலன்)-

இலங்கையில் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் நீண்ட காலம் தொட்டே இனம், வரலாறு, ஆள்புலம், மொழி, சமயம், கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றின் அடிப்படையில் தனிப்பட்ட இரு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களாக வாழ்ந்து வந்துள்ளனர். வரலாற்று ரீதியாக அவர்கள் வேறுபட்ட இரு நாட்டினங்களாக உருவாகியுள்ளனர். ''வேறுபட்ட இரண்டு இனங்கள் பழங்காலத்தில் இருந்தே தீவின் உரிமையைத் தங்களுக்கிடையே பிரித்துக் கொண்டன. தெற்கு மேற்குப் பாகங்களில் உள்ள சிங்களவர் வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரைக்கும், தமிழர், வடக்கு, கிழக்குப் பாகங்களிலும் உரிமை பெற்றிருந்தனர்'' என 1797 இல் கிளக்கோன் குறிப்பிட்டுள்ளார். இதை மேலும் வலியுறுத்துவதாக 1803ம் ஆண்டுக்குரிய 'அரோஸ்மித்' தேசப்படமானது சிங்களவரும், தமிழரும் ஏற்றுக்கொண்ட அவரவர்களுக்குரிய தனிப்பட்ட பாரம்பரியப் பிரதேசங்களை எடுத்துக்காட்டுகின்றது.

16ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆகிய மூன்று ஐரோப்பியச் சக்திகளும் இலங்கையை காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தன. பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இரு தேசிய இனங்களும் ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. இந் நடவடிக்கை சிறுபான்மை மக்களுக்கு பல்வேறுபட்ட வழி முறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்தது. சுதந்திரத்தின் பின்பும் ஆட்சி அதிகாரம் பெரும்பான்மை இனத் தலைவர்களின் கையில் இருந்தமையினால் இரு இனங்களுக்கும் இடையிலான இன உறவுகள் படிப்படியாக சீர்குலையத் தொடங்கின. இந்த விரிசல் படிப்படியாக வளர்ச்சி அடைந்து 1972ம் ஆண்டு குடியரசு அரசியல் அமைப்புடன் ஒரு உச்சநிலையை அடைந்தது. இதைத் தொடர்ந்து 1970களிலும் 1980 களிலும் முக்கியமான ஒரு பிரச்சினையாக இப்பிரச்சினை வளர்ச்சியடைந்து இன்று தேசியரீதியிலும் தியாந்பிர ரீதியிலும், சர்வதேச ரீதியிலும், முக்கிய இடத்தைப் பெற்றுள்ளஒரு சமகாலப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

இன்று இந்தளவு முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ள இப்பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையாகக் கொள்ளப்பட்ட போதும், அடிப்படையில் இது ஒரு பொருளாதாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையேயாகும். ஒரு சிறு பான்மைத் தேசிய இனம், பெரும் பான்மைத் தேசிய இனத்தினுல் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் புறக்கணிக்கப்பட்டதன் விளைவே இப்பிரச்சினையாகும். இந்த அடிப்படையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை ஒரு பொருளாதாரப் பிரச்சினை என்பதையும், அடிப்படையில் பல பொருளாதாரக் காரணிகளை இது பின்னணியில் கொண்டுள்ளது என்பதையும் விளக்குவதற்கு இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

இலங்கையின் தமிழ்த் தேசிய இனம் பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களால் பின்வரும் நடவடிக்கைகளின் மூலம் புறக்கணிக்கப்பட்டதன் கூட்டு மொத்தமான விளைவே இனப் பிரச்சினையாகும்.

- சிங்களம் மட்டுமே தமிழ்ப் பிரதேசம் உட்பட இலங்கைத் தீவு முழுவதற்கும் அரசகரும மொழியாக்கப் பட்டமை.
- தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கக் கூட்டுத்தாபன வேலை வாய்ப்புக்களில் பாரபட்சம் காட்டப்பட்டமை.
- பல்கலைக் கழகங்களுக்கு தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படும் பொழுது 'தரப்படுத்தல்' முறை கைக் கொள்ளப் பட்டமை.
- தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டமை.
- வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தி வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வந்தமை.
- பெரும்பான்மை இனத்தின், மத, கலாசாரங்கள் வளர்க்கப் பட்டமையும், சிறுபான்மை இனத்தின் மத, கலாசாரங்கள் புறக்கணிக்கப்பட்டமையும்.

1956 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவினுல் கொண்டுவரப்பட்ட சிங்களம்மட்டும் சட்டமும், சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கி உயர்வளித்துள்ள 1972ம் ஆண்டின் அரசியல் அமைப்பும் தமிழ் மக்களுக்கு அவர்களின் மொழியுரிமையினை வழங்குவதற்கு மறுத்துள்ளன. 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பு தமிழ் மொழிக்கு தேசிய மொழி அந்தஸ்த்தை வழங்கிய போதும். இது வெறும் ஏட்டுச் சுரக்காய் ஆகவே இன்றுவரை உள்ளது. அரசகரும மொழிகாரணமாக சிங்களத்தில் தேர்ச்சி பெருத பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். வேலை வாய்ப்புக்களில் சேர்க்காது விடப்பட்டனர். பதவியுயர்வுகள், புலமைப் பரிசில்கள் என்பனவும் மறுக்கப்பட்டன, உயர் அதிகாரிகளுக்கு மாத்திரமன்றி, சாதாரண தொழிலாளர்களுக்கும் அரசகரும மொழித்தகுதி கவனமாக நோக்கப் பட்டது. நியமனம் முதல், ஓய்வூதியம் பெறும்வரை தமிழ்ப் பிரதேசங்களிலேயே வேலை செய்ய வசதியுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் கூட இதனுல் பாதிக்கப் பட்டனர். இவ்வாருன நிலைமைகள் வேலை வாய்ப்பின்மையை தமிழ்



இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியமையினுல் அவர்கள் பொருளாதாரப் பிரச்சினையை எதிர் நோக்கினர். இளம் சந்ததியினர் மத்தியில் விரக்திமனப்பான்மை வளர்ச்சியடைவதற்கும் இது காரணமாக அமைந்ததுடன், உத்தியோகத்தினை நம்பியிருந்த படித்த இளைஞர்களை பொருளாதார ரீதியில் பலவீனமடையச் செய்யும் ஒரு நடவடிக்கையாகவும் அமைந்து இருந்தது.

இந்த நாட்டில் வேலையின்மைப் பிரச்சினை குறிப்பிட்ட ஒரு சமூகத்தினருக்கு மாத்திரம் உரிய ஒன்ருக இருக்கவில்லை. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் என்ற வேறுபாடின்றி எல்லாத் தரப்பினர் மத்தியிலும் வேலையின்மை நிலவுகின்றது, ஆனுல் ஒரு பிரிவினரின் வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக இன்னெரு பிரிவினருக்குரிய நியாயமான வேலை வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. உண்மையில் வேலையின்மை தவருன கல்விக் கொள்கையினுலும், முதலாளித்துவத் திட்டமிடலின் குறைபாடுகளினுலும் ஏற்பட்ட ஒன்ருக இருந்த போதும் இது மூடி மறைக்கப்பட்டு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இனவாத அணுகு முறை பின்பற்றப்பட்டது. பிரச்சினைகளுக்கான சரியான காரணத்தைக் கண்டு பரிகாரம் செய்யாது இனவாத ரீதியில் பிரச்சினை மூடி மறைக்கப்பட்டு வந்ததன் விளைவே இப்பிரச்சினையின் இன்றைய 'பூகம்ப' நிலையாகும்.

1971ல் இடம் பெற்ற ஏப்ரல் கிளர்ச்சிக்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்று தென் இலங்கை இளைஞர்கள் மத்தியில் காணப்பட்ட வேலையின்மையாகும் என ஏற்றுக் கொள்பவர்கள். இலங்கையின் இன்றைய நிலைக்கும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் காணப்பட்ட வேலையின்மையும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள ஏனே? மறுக்கிருர்கள். 1971ல் வேலையற்றிருந்த சுமார் 70,000 இளைஞர்கள் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டதாக அறிக்கைகள் கூறுகின்றன. இதன் மூலம் வேலையின்மை எவ்வாருன தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியது என்பதை அறிந்து கொள்ள முடியும். எனவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தமிழ் இளைஞர்கள் மத்தியில் நிலவிய வேலைவாய்ப்பின்மை மிகவும் முக்கிய ஒரு பொருளாதாரக் காரணியாகும்.

இலங்கையில் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாகவும் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். ஐக்கிய முன்னனி அரசாங்கத்தினுல் 1970களில் அறிமுகப்படுத்தப்பட்ட 'இனவாரித்தரப்படுத்தல் முறையே' இதற்கு காரணமாகும். ஒரு நாட்டின் உயர்கல்வி நிலையங்கள் என்ற வகையில் - புத்திஜீவிகள் உருவாக்கும் உன்னத நிறுவனங்கள் என்ற வகையில் - பல்கலைக்கழகங்களுக்கு தனியிடம் உண்டு. அங்கு எதிலும் பாரபட்சம் காட்டக் கூடாது. ஆனுல் இனரீதியான தரப்படுத்தல் முறை இந்த வகையில் இலங்கைப் பல்கலைக்கழகங்களையும், உயர்கல்வி முறையையும் இழிவுபடுத்தும் ஒன்ருகவே அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில், பல்கலைக் கழகத்திற்கு, தகுதி பெற்ற எல்லா மாணவர்களையும் உள்ளிழுக்கக் கூடிய பொருளாதார ஆற்றல் இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இல்லாமையே இதற்கான அடிப்படைக் காரணமாகும். அத்தோடு இலங்கைத் தீவு முழுவதும் ஒரே சீரான கல்வி வளர்ச்சியற்ற நிலையும் இதனை மேலும் சிக்கலாக்கியது. பின்தங்கிய பகுதி மாணவர்களுக்கு சலுகையளிக்கப்பட வேண்டும் என்பது நியாயமானதே. அதற்காக, எல்லா வகையிலும் போதுமான தகுதியினையுடைய குறிப்பிட்ட ஒரு இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்படுவது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். தகுதியான மாணவர்கள் அனைவரையும், பின்தங்கிய பகுதி மாணவர்களை சலுகையின் அடிப்படையிலும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்வதை விடுத்து - தகுதியான மாணவர்கள் இனரீதியில் வஞ்சிக்கப்பட்டமை இனப்பிரச்சினையின் வளர்ச்சிக்கு மற்றொரு உந்து சக்தியாக அமைந்தது.

அபிவிருத்தியின் அடிப்படை கல்வியேயாகும். கல்வி மூலமான அறிவு வளர்ச்சியும், சிந்தனைத் தெளிவுமே சரியான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சக்தி படைத்தவையாகும். அவ்வாறான உயர் கல்வி மறுக்கப்பட்டமை சிறுபான்மைத் தமிழ்த்தேசிய இனத்தின் சமூக, பொருளாதார, கலாசார, பண்பாட்டு அபிவிருத்திகள் அனைத்தையும் தடைப்படுத்துவதாக இருந்தது. வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற நிலையை விடவும், கல்வியே இல்லாமல் இருக்கின்ற நிலை நிலைமையை மேலும் மோசமாக்கியது. தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தலால் ஏற்பட்ட வீழ்ச்சி, தொழில் சந்தையிலும் உடனடியாக நிரம்பலை அதிகரிக்கக் கூடியதாக இருந்தமையினால் வேலையின்மைப் பிரச்சினை மேலும் உக்கிரமடைந்தது.

காலனித்துவ காணிக் கொள்கையின் கீழ் தென்னிலங்கையின் பெருந்தொகையான நிலம் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்பட்டிருப்பதனாலும் மத்திய மலைநாடு கொண்டுள்ள பௌதிக நிலத்தோற்றப்பாடு காரணமாகவும் நீண்டகாலமாகவே அங்கு நிலப்பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு இடவசதி அளிக்க வேண்டிய பொறுப்பு எந்த ஒரு அரசாங்கத்திற்கும் உரிய தலையாய கடமையாகும். ஆனால் இந் நிலப்பிரச்சினை இங்கு எவ்வாறு தீர்க்கப்பட்டது. அல்லது தீர்வுக்கு எவ்வாறான அணுகுமுறை பின்பற்றப்பட்டது என்பதே கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

தென் இலங்கை மக்களை போதிய நிலப்பரப்பைக் கொண்டுள்ள வடமேல் மாகாணம், வட மத்திய மாகாணம் என்பவற்றில் குடியமர்த்தியிருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யப்படாது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியமர்த்தப்பட்டனர். இதனால் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகள்



மேலும் விரிசலடைந்தன. தமது பாரம்பரிய பிரதேசம் திட்டமிட்ட வகையில் பறிபோவதை தமிழ் மக்கள் உணரத்தலைப்பட்டனர். ஒரு தேசிய இனத்தை வரையறுக்கக் கூடிய ஆள்புலம் தொடர்பாக எந்த ஒரு தேசிய இனமும் மிகவும் கவனமாகவே இருக்க முற்படும். இந்த வகையில் தமிழ்த் தேசிய இனமும் தமது நிலம் திட்டமிட்ட குடியேற்றத் திட்டத்திற்குட்படுவதை அங்கீகரித்திருக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதே வேளை தென்னிலங்கை சுதேசிகளை விடவும், மிகவும் மோசமான சமூக, பொருளாதார, அரசியல் நிலையினைக் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் ஒரு துண்டு நிலத்திற்குக் கூட உரிமை அற்றவர்களாக இருந்து நூற்றாண்டு காலமாக உழைத்த போதும் அவர்கள் இது தொடர்பாக புறக்கணிக்கப்பட்டனர். குடியேற்றத் திட்டங்களால் யாழ் குடாநாட்டிற்கு வெளியில் உள்ள வடமாகாணப் பகுதிகளும், கிழக்கு மாகாணமும் பெரிதும் பாதிக்கப்பட்டன. குறிப்பாக இப்பகுதிகளின் தமிழ் விவசாயிகள் தமது பொருளாதார பலத்தை இழந்தனர். வடக்குக்கும் கிழக்குக்கும் இருந்த ஆள்புலத் தொடர்ச்சி திட்டமிட்ட குடியேற்றத்தினால் துண்டிக்கப்பட்டது.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட விவசாய அபிவிருத்தித் திட்டங்களைத் தவிர வேறெந்த அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. விவசாயம், கைத்தொழில், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, மின்சார விநியோகம், வீடமைப்பு போன்ற அனைத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உரிய பங்குகள் அபிவிருத்திக்காக வழங்கப்படவில்லை. தேசிய செல்வத்தினை பகிர்ந்தளிப்பதில் பாரபட்சம் காட்டப்பட்டு வந்துள்ளது. வடக்கு, கிழக்கில் அமைந்திருக்கும் ஒரு சில கைத்தொழில்களுக்குப் போட்டியாக, தென் இலங்கையிலும், மேற்கிலும் அதே கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. எம்பிலிப்பிட்டிய கடதாசி ஆலையும், புத்தளம் சீமெந்து ஆலையும் இந்தவகையைச் சார்ந்தவையேயாகும். 1960களில் இருந்து வடக்கு, கிழக்கிற்கான அபிவிருத்திக்கு ஒதுக்கீடுகள் இடம்பெறவில்லை.

சிறுபான்மைத் தேசிய இனத்தின் மதங்கள், கலாச்சாரம் என்பனவும் ஒப்பீட்டு ரீதியில் உரிய இடத்தினைப் பெறவில்லை. அவர்கள் தமக்கே உரித்தான விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இந்த அடிப்படையில் நோக்குகையில் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அடிப்படையாக அமைந்துள்ள அரச கரும மொழி விவகாரம், வேலையின்மை, தரப்படுத்தல், திட்டமிட்ட குடியேற்றம், அபிவிருத்தியில் புறக்கணிப்பு ஆகிய அனைத்து அம்சங்களும் பொருளாதாரம் சார்ந்தவையாகும். இதனால் இலங்கையின் இனப்பிரச்சினை அடிப்படையில் ஒரு பொருளாதாரப் பிரச்சினையேயாகும். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உண்மையை இன்னும் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் ஒரு கசப்பான உண்மையாகும். எனவே இனப்பிரச்சினைக்கான உறுதியான தீர்வு பொருளாதார ரீதியானதாகவே அமைந்திருக்க வேண்டும். அரசியல் தீர்வு என்பது பொருளாதாரத் தீர்வுகளை நடைமுறைப் படுத்துவதற்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் என்ற வகையிலே ஒரு வரையறைக் குட்பட்ட வகையில் பலாபலன்களைப் பெற்றுத்தர முடியும். எல்லோருக்கும் வேலைவாய்ப்பும், நிலமும், உயர்கல்வியும், மற்றைய சமூக பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படை வசதிகளையும் பெற்றுத்தரக் கூடிய பொருளாதார ரீதியான அணுகு முறையே இப் பிரச்சினைக்கான நீண்டகால உறுதியான தீர்வாக அமைய முடியும். இதற்குக்காரணம் அடிப்படையில் இப் பிரச்சினை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக இருப்பதேயாகும். உண்மையில் இலங்கையின் இனப் பிரச்சினை பொருளாதாரத் தேவைகளின் அரசியல் வெளிப்பாடாகும்.

# மீண்டும் ஓர் அறை கூவல்!

வயலின் முதல் இதழ் வெளிவந்து பிரதிகள் எல்லாம் தீர்ந்து போயின. மகிழ்ச்சியான விடயம்தான். ஆயினும் போட்ட முதல் திரும்பவே இல்லை. இருப்பினும் இரண்டாவது இதழும் வருகின்றது. ஆற்றல் மிக்க ஆக்கங்களை அனுப்புங்கள் என முதல் இதழில் வேண்டினோம். ஆனால் வந்தவைகள்... ? அவை பற்றி நாம் பேச விரும்பவில்லை. மீண்டும் அறைகூவல் விடுக்கின்றோம். குண்டுச் சட்டிக்குள் குதிரையோடும் மனப்பான்மையைக் கைவிட்டு சற்று வெளியே வந்து உலகைக் கண்டு காத்திரமாகச் சிந்தியுங்கள்! அவைகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்! கிழக்கைச் சேர்ந்தோருக்கே குறிப்பாக இதைச் சொல்கின்றோம்.

கருத்து முரண்பாடுகள் கொண்ட ஆக்கங்களுக்கும் நாம் களம் கொடுக்கத் தயாராகவே உள்ளோம். அவை கனதியாக இருக்கும் பட்சத்தில்.

- ஆசிரியர் குழு -



# மனைவி அமைவதெல்லாம்

( அன்புமணி )

நவரெத்தினம் வேகமாகச் சைக்கிளை மிதித்தான். கல்லடிப் பாலத்தின் இறக்கத்தில் சைக்கிள் சர்ரென்று விரைந்தபோது, அவன் எண்ணங்கள் வேறெங்கோ விரைந்து கொண்டிருந்தன.

பெண்களைப் புரிந்துகொள்வது கஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நல்லம்மா கூடவா அப்படி?

ஒரு கோணத்தில் பார்த்தால் அப்பாவியாகத் தோன்றுகிறாள். இன்னொரு கோணத்தில் பார்த்தால் அப்படியில்லை போலவும் தோன்றுகிறாள். ஒரு சமயம் அடக்கமான பெண் என்று நினைக்கத் தோன்றுகிறது. இன்னொரு சமயம் ஆட்டக்காரி என்று எண்ணவும் தோன்றுகிறது.

எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கையில்லாத ரவிக்கையை இன்னும் விடவில்லை. இப்போது லோஹிப்சாரி வேறு. கேட்டால் வேலை பார்க்கும் பெண்கள் என்றால் அப்படித்தான் இருக்கவேண்டுமாம். இதெல்லாம் தொழிலுக்காகப் போடவேண்டிய வேஷம் என்கிறாள் 'அவள் ஒரு தொடர் கதை' பார்த்திருப்பாளோ?

ஏழைப் பெண் என்று கை கொடுக்க முன்வந்தால் என்னையே ஆழம் பார்ப்பதுபோல சில சமயங்களில் பேசிவிடுகிறாளே. பேச்சில் அவளை வெல்லமுடியாது. அதில் சந்தேகமே இல்லை. எப்படியான முட்டாள் தனமான காரியத்தைச் செய்தாலும் அதற்குச் சாமர்த்தியமான பதில் ஒன்று தயாராக வைத்திருப்பாள். இல்லாவிட்டால் —

அந்த எக்கவுண்டன் கூறிய வார்த்தைகளை என்னிடம் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? சிவராசாவைக் கொண்டு மணிக்கூடு வாங்கவேண்டிய அவசியம் என்ன?

நவரெத்தினம் மட்டக்களப்பில் பிரபல கொந்துறாத்துக்காரர் நல்லதம்பியின் பிரதிநிதி. பிரதிநிதி என்ன அவனேதான் உண்மையான 'நல்லதம்பி' அதாவது நல்லதம்பி ஆற்றவேண்டிய சகல காரியங்களையும் நவரெத்தினம் ஆற்றி வந்தான். அவன் காட்டிய இடங்களில் கையெழுத்துப் போடுவது மட்டும் நல்லதம்பியின் வேலை நேர்மை, திறமை, ஆற்றல் முதலிய இன்னோரன்ன சிறப்புக்களால் அவன் நல்லதம்பியையும் விடப் பிரபலமாகியிருந்தான்.

அவன் தொழில் முறையில் பல திணைக்களங்களுக்கு அடிக்கடி செல்லவேண்டியிருந்தது. ஒரு திணைக்களத்தில் இலிகிதராக வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த நல்லம்மா அவனுக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்தாள். டென்டர் பத்திரம் எடுத்துக் கொடுத்தல், வவுச்சர்களைத் துரிதமாகக் கணக்குக் கிளைக்கு அனுப்புதல் முதலிய உதவிகளை நல்லம்மா செய்ய அதற்குப் பிரதியாக வெளியே அவளுக்குத் தேவையான சில காரியங்களை அவன் முடித்துக் கொடுக்க கந்தோர் தொடர்பு வளர்ந்தது. அதுவே காலப்போக்கில் நட்பாகவும் மலர்ந்தது.

நல்லம்மாவின் குடும்ப நிலை கொஞ்சம் கொஞ்சமாக நவரெத்தினத்திற்குத் தெரியவந்தது. முப்பது வயதை நெருங்கிக்கொண்டிருந்த போதும் அவள் வாழ்க்கையில் ஏன் வசந்தம் வீசவில்லை என்பதும் அவனுக்குப் புரிந்தது. வயதான தாயையும் நான்கு தம்பிகளையும் கொண்ட குடும்பத்தைப் பராமரிக்கவேண்டிய பொறுப்பு அவளுடையது. அது மட்டுமல்ல அந்தத் தம்பிகளின் படிப்புக்கான செலவுகளையும் அவள் கவனிக்க வேண்டும்.

குருவி தலையில் பனங்காயைச் சுமந்தது போல் இந்தச் சின்னப் பெண்ணின் தலையில் இறைவன் இந்தப்பெரிய சுமையை ஏற்றியிருக்க வேண்டாம். நவரெத்தினத்திற்கு அவள்மேல் ஒரு அனுதாபம்.

தன்மேல் ஏற்பட்ட சுமையை அவள் சந்தோஷமாகத் தாங்கிக் கொள்கிறாள். வெற்றிகரமாகச் சமாளித்தும் வருகிறாள். சும்மாவா? அவளுடைய தம்பி ராஜன் வைத்தியக் கல்லூரியில் இருக்கிறான். இன்னும் சில வருடங்களில் டாக்டராக வரப்போகின்றான். நவரெத்தினத்திற்கு அவள்மேல் ஒரு மதிப்பு.

நவரெத்தினத்தின் சுறுசுறுப்பு, நாணயமான போக்கு எல்லாவற்றிற்கும் மேலாக அவன் இளகிய சுபாவம். இத்தனையும் நல்லம்மாவுக்குப் பிடித்திருந்தன. அவன்மேல் ஒரு தனியான அபிமானம் அவளுக்கு.

நட்பு வளர்வதைக் கேட்க வேண்டுமா? காரியாலயத் தொடர்பு வீடுவரை வந்துவிட்டது. நவரெத்தினம் நல்லம்மாவின் வீட்டிற்கு அடிக்கடி செல்லுவதும், இப்போது சகஜமாகிவிட்டது இந்தச் சந்திப்புகள், தெருவோரத்திலோ, கடற்கரையிலோ, தியேட்டர்களிலோ இல்லாமல் வீட்டில் ஏற்பட்டதால், வீட்டில் கூட இந்தச் சந்திப்புகளுக்கு ஆட்சேபனை இருக்கவில்லை. அவர்களின் சந்திப்புக்கள் இந்த அளவுக்குக் கண்ணியமாக இருந்ததனால், அந்த நட்பு மேலும் மலர்ச்சியடைந்து வசந்தத்தின் வாசலுக்கு வந்துவிட்டது.

இந்தக் கட்டத்தில்தான் ஊடலுக்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன.

ஒரு அலுவலகத்தில் பல ஆண்களுக்கு மத்தியில் பணிபுரியும் பெண்கள் சக உத்தியோகத்தர்களோடு பேசிப்பழகுவது தவிர்க்கமுடியாதது ஆனால் அந்த வாய்ப்பை சிலர் தவறான வழியில் பயன்படுத்திக்கொள்ள முற்படுவதும் உண்டு.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் அசடுவழிவார்கள். தலைநரைத்த கிழவர்கள்கூட பெண்களிடம் சில சேட்டைக் கதைகள் பேசாவிட்டால் அவர்களுக்கு மண்டை வெடித்துவிடும். அதிகாரமும் அட்டகாசமுமாக உலவிவரும் உயர் அதிகாரிகள்கூட பெண்களிடம் சில தமாஷ் கதைகள் பேசிச் சிரித்து மகிழ்ந்துவிட்டு தமக்குக் கீழ்ப் பணிபுரியும் ஊழியர்களிடம் சமத்துவமாகப் பழகுவதாகப் பாவனை பண்ணுவார்கள்.

இந்தப் பின்னணியில் ஒரு பெண்ணைப்பற்றி அவள் பணிபுரியும் அலுவலகத்திலேயே 'கதைகள்' கட்டிவிடுவது சகஜம். யாராவது ஒருவருடன் இரண்டு வார்த்தை அதிகம் பேசிவிட்டால் அல்லது கொஞ்சம் மனம்திறந்து சிரித்துவிட்டால் போதும் உடனே அவருக்கும் அவளுக்கும் முடிச்சுப்போட்டு விடுவார்கள். நல்லம்மாவைப் பற்றியும் இப்படியான பல முடிச்சுக்கள் உருவாகியிருந்தன.

இதைப்பற்றி நவரெத்தினம் ஏதாவது அவளிடம் கேட்டால், பேச்சினால் அவனையே முட்டாளாக்கிச் சிரிப்பாள் நல்லம்மா.

ஒரு நாள் நல்லம்மா கூறினாள்.

''இன்று அலுவலகத்தில் ஒரு வேடிக்கை எங்களுடைய எக்கவுண்டன்ட் என்ன கூறினார் தெரியுமா? 'நல்லம்மா, நான் ஏன்தான் அவசரப்பட்டுக் கல்யாணம் செய்துகொண்டேன் என்று உன்னைப் பார்க்கும்போதெல்லாம் எண்ணுகிறேன். எனக்கு திருமணமாகாமல் இருந்திருந்தால் இப்போது உன்னைத்தான் திருமணம் செய்துகொள்வேன்' என்றார். எனக்கென்றால் ஒரே வெட்கமாகப் போய்விட்டது. முகத்தைப் பொத்திக்கொண்டு அவர் அறையை விட்டு ஓடிவந்துவிட்டேன்''.

நவரெத்தினத்தின் நெஞ்சில் ஒரு 'துணுக்'.

எக்கவுண்டன்ட் ஏகாம்பரம் ஒரு கிழட்டுக்கழுகாக மாறி நல்லம்மாவைத் தன் கூரிய மூக்கினால் குத்திக்குதறிவிடக் குறி பார்ப்பது போன்ற பிரமை ஒரு கணம் தோன்றி மறைந்தது. வழக்கமான பல்லவிதான். 'சில நேரங்களில் சில மனிதர்கள்' ஆமாம். அந்த எக்கவுண்டன்ட் இன்னும் இரண்டு வருடங்களில் இளைப்பாறப் போகிறவர். கிழட்டுவறாஸ்.

ஆனால் நவரெத்தினத்தின் நெஞ்சைக் குத்தியது, அந்த எக்கவுண்டனின் பேச்சு அல்ல; நல்லம்மாவின் பேச்சுத்தான்.

அவன் அப்படிப் பேசியதற்கு, காலில் கிடந்த செருப்பைக் கழட்டிப் பதில் சொல்லியிருக்கவேண்டும். அவன் எக்கவுண்டன்ட் என்ற காரணத்தால் அப்படிச் செய்யமுடியாது என்றால் 'ஷட்டப்' என்று ஒரு வார்த்தையாவது கூறியிருக்கவேண்டும். அதுவும் இல்லையென்றால் தனக்கு ஏற்பட்ட இந்த அவமானம் இந்த நான்கு சுவர்களுக்குள்ளும் புதைந்துவிடட்டும் என்று அத்தோடு அந்த அசிங்கத்தை மறந்து தொலைத்திருக்கவேண்டும்.

இவை எதையுமே செய்யாமல் இந்த இழிவுரையைத் தனக்குக் கிடைத்த ஒரு பாராட்டுரையாகக் கருதி அதைப் பிறரிடம் வாய்திறந்து சொல்லவும் ஒரு பெண் துணிவதென்றால்? அதுவும் தான் மிகவும் நேசிக்கும் ஒருவனிடமே கூறத் துணிவதென்றால்! — சீ! இவளும் ஒரு பெண்ணா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு சம்பவம்.

நல்லம்மாவின் கையில் ஒரு புது ரக மணிக்கூடு பளிச்சிடுகிறது. நல்லம்மா கொஞ்சம் பெருமிதத்துடன் கூறுகிறாள்.

''இது வெளிநாட்டுக் கடத்தல் மணிக்கூடு. இங்கே விற்பனைக்குக் கிடையாது. எனக்கென்று சிவராசா யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வந்தவர்.

சிவராசா! அவனா?

நவரெத்தினத்தின் மனதில் மற்றொரு 'சுருக்'

சிவ்ராசா ஒரு காதல் மன்னன். கச்சேரியின் உள்ளேயும் வெளியேயும் அவனுக்கு நிறையக் 'காதலிகள்'- கேர்ள் பிறண்ட்ஸ் இருந்தனர். அந்தக் கிளையிலேயே உள்ள புஷ்பா என்ற பெண்ணுடன் அவன் நடாத்தும் சல்லாபம் கச்சேரி அறிந்த செய்தி. நல்லம்மாவுடன் கூட அவன் அளவுக்கு மீறிப் பழகுவதுண்டு. அப்படிப்பட்டவனைக் கொண்டா நல்லம்மா மணிக்கூடு வாங்கியிருக்கவேண்டும். ஏன் நான் இல்லையா? கொழும்பில் படிக்கும் அவள் தம்பி ராஜன் இல்லையா?

ஒரு வாரமாக நவரெத்தினம் நல்லம்மாவின் வீட்டுப்பக்கமே போகவில்லை. நல்லம்மாவை அவனால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

பொதுவாகவே, உத்தியோகம் பார்க்கும் பெண்களைப்பற்றி நவரெத்தினத்திற்கு அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இல்லை. இருந்தபோதிலும், நல்லம்மாவின் குடும்ப நிலையை உணர்ந்தே அவன் அவள் பால் தன் கவனத்தைத் திருப்பினான். அவன் எதிர்பார்த்ததெல்லாம் அப்பழுக்கற்ற பரிசுத்தமான இதயம் ஒன்றுதான். ஆனால் அது கூட அவனுக்குக் கிடைக்காதோ?

குட்டை குழம்பிவிட்டது. அடியில் புதைந்திருந்த சேறுகள் சகதிகள் எல்லாம் மேலே வரத்தொடங்கிவிட்டன. நல்லம்மாவைப் பற்றி அவன் நண்பன் சபாநாயகம் கூறிய ஒரு கதை இப்போது அவன் நெஞ்சத்தில் நிழலாடியது. முன்பு அதை வழக்கமான 'கதை' என்று தட்டிக் கழித்திருந்தான். ஆனால் இப்போது அவனால் அப்படிச்செய்ய முடியவில்லை. ஏன் அதுவும் உண்மையாக இருக்கக்கூடாது.

நல்லம்மா தன்னுடன் பணிபுரியும் பீயன் ஒருவனிடம் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதாகவும் கணவன் மனைவி போல் பழகுவதாகவும் ஒரு கதை. அலுவலகத்தில் சேர்ந்த புதிதில் மற்றொரு சக இலிகிதருடன் நட்பு வைத்திருந்ததாக இன்னொருகதை. கொழும்பில் வேலை பார்த்த இடத்தில் யாருடனோ காதல் தொடர்பு வைத்திருந்ததாக மற்றொரு கதை. இந்தக் கதைகள் எல்லாம் ஏன் உருவாகவேண்டும்?

முடியாது. இவள் சகவாசமே இனி நமக்கு வேண்டாம். இப்படி எண்ணியவாறு சைக்கிளை நிறுத்தினான் நவரெத்தினம். பார்த்தால் சைக்கிள் நல்லம்மாவின் வீட்டு வாசலில் நின்றது.

அந்தநாள் முதல் இந்த நாள் வரை காதல் வியாதியின் போக்கே இதுதான். மனம் ஒன்று நினைக்கும். செயல் வேறொன்றாக இருக்கும்.



''வாங்க வாங்க இன்றைக்கு நீங்கள் எப்படியும் இங்கே வருவீர்கள் என்றே எதிர்பார்த்தேன்.

'' ......... ''

''ஒரு வாரமாகிவிட்டதல்லவா''

'' ......... ''

''சரிதான். ஊடல் இன்னும் தீரவில்லை போலிருக்கிறது. சின்ன விஷயத்தையெல்லாம் ஏன் இப்படிப் பெரிதுபடுத்துகிறீர்கள்? அலுவலகத்தில் நடப்பதை மறைக்காமல் உங்களிடம் கூறினேன். அது ஒரு குற்றமா?''

பிளாஸ்கிலிருந்த கோப்பி கப்பில் இறங்கி அவன் பக்கத்தில் வந்து இருந்தது. நவரெத்தினம் அதைத் தொடவில்லை.

'கிளுக்' என்று சிரித்தாள் நல்லம்மா.

''உண்மையான காதல் இருந்தால்தான் இப்படியெல்லாம் ஊடல் நடக்குமாம். காதலைப் பொறுத்த வரை பொறாமையும் ஒரு அணிகலன் தான்''.

''இது பொறாமை அல்ல. பொறுமை''

''அப்பாடா, வாய்முத்து உதிர்ந்துவிட்டதே இனித் தாராளமாகப் பேசலாம் அல்லவா?''

இதன் பிறகு, பேச்சுகள் காதலர்களுக்கே உரிய அசட்டுப் பிசட்டு! கெக்கே பிக்கே!

இரவு எட்டுமணியாகியும் பேச்சு முடிந்தபாடில்லை அவளுடைய தாய் முன்விறுந்தையில் உட்கார்ந்தபடியே தூங்கிப் போய்விட்டாள். தம்பிகள் இருவர் உள் அறையில் நல்ல தூக்கம். எட்டிச்செல்லும் நவரெத்தினத்தை ஒட்டவைக்கும் வித்தை நல்லம்மாவுக்குத் தெரிந்திருந்தது.

இரவு நேரம் — தனிமை — ஏங்கும் உள்ளங்கள்!

மெய்மறந்த சில கணங்கள்!

நவரெத்தினத்திற்கு எதிர்பாராத விருந்து! எதிர்பாராத அதிர்ச்சி!

நவரெத்தினம் அவ்வீட்டை விட்டுப் புறப்பட்டபோது ஒன்பது மணியாகிவிட்டது. நல்லம்மா கண்களில் ஒரு 'மோனலிசா' புன்சிரிப்புடன் வாசல்வரை வந்து கையசைத்து விடை கொடுத்தாள்.

நவரெத்தினம் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தபோது அவன் மனம் மிகத் தெளிவு பெற்றிருந்தது. வரும் போது இருந்த குழப்பமும் தளப்பமும் இப்போது அவனிடம் இல்லை.

'ஆம்! மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். நிச்சயமாக இவள் என் மனைவியாக இருக்கமுடியாது?'

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்போம்!

தமிழ்த் தேசிய இனத்தின் ஐக்கியம் அதிகமாகப் பேசப் படும் காலம் இது. பேசினல் மட்டும் போதுமா? நடைமுறையிலும் அது வேண்டும் அன்ருே? ஆயின் பின் வரும் செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றது. யாழ்குடா நாட்டில் வாழும் ஐந்துலட்சம் சனத்தொகை கொண்ட தாழ்த் தப்பட்டோர் எனக் கூறப்படுகின்ற மக்மளுக்குப் பின்வரும் ஆல யங்கள் வழிபாட்டு உரிமையை மறுத்து வருகின்றன. அவற்றின் விபரம் வருமாறு.

கரவெட்டி தச்சன் தோப்புக் கோயில்.
கிராய்ப் பிள்ளையார் கோயில்.
அம்பன் முருகன் கோயில்.
வல்வெட்டித்துறை சிவன் கோயில்.
அம்மன் கோயில்.
நெடியகாடு பிள்ளையார் கோயில்
நெல்லியடி முருக மூர்த்தி கோயில்
புன்னுலைக் கட்டுவன் ஆயர் கடவை பிள்ளையார் கோயில்
ஈவினை பிள்ளையார் கோயில்.
வழக்கம்பரை அம்மன் கோயில்.

**இன்னும் சாதிவெறி தமிழ்மக்களுக்கு தேவைதானு?**

**சிந்திப்போம் !!**

தகவல் : "தொழிலாளி"
*1986 - டிசம்பர்.*



# வேக்காட்டு விளிப்புகள்

**- எச். எம். பாறுக் -**

சில்லூறுச் சத்தம்.
இரவின் நெஞ்சுத் துயரம்.
வெளியில்,
வெள்ளிகள் கெக்கரித்துக் கிடக்கும்
வானை
விளையாட்டு பொம்மை நிலவை
கேட்கிறேன் !
இவைகளின் உரிமைக்காரன் எங்கே?

கோடரி கொண்டு
நெஞ்சைப் பிளந்தது
வந்த செய்தி !
கோபால் போய்விட்டான்.

கொக்கட்டிச்சோலை,
மாந்தோட்டம்,
அறந்தலாவை,
பிணக் குவியல்களுடன்
நானும் கிடக்கின்றேன்.

இன்னும் எங்கே அவன்?

ஓட்டை வாளியில் தண்ணீர் இறைக்கும்
உடைந்த கதவைத் தூக்கித்திரியும்
நாற்பட்டி முனையாள் காவியம்
பாடிச் சிரிக்கும் மூத்தம்மா,
கல்லில் விழுந்து காலில் இரத்தம்.

அவனிடம் கேட்கவேண்டும்
ஆயிரம் கேள்விகள்!
எங்கே அவன்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றும் உலகினது
# விஞ்ஞான தொழில்நுட்ப அணுகுமுறைகள்

— சாருமதி —

உலக நாடுகளை இன்று மூன்று மண்டலங்களாக பகுத்துப் பார்க்கும் மரபொன்று வழக்காகி வருகின்றது. உலகநாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக அடிப்படைகளைக் கொண்டே இப் பகுப்பு செய்யப்படுகின்றது. ஆயினும் உலகநாடுகளை மூன்று மண்டலங்களாக பகுத்து வகையீடு செய்வதில் வெவ்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. உதாரணமாக சீன அரசியலாளர்களின் பகுப்பு வகையீடு பின்வருமாறு அமைகின்றது. சோவியத்யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய இரு வல்லரசுகளும் முதலாம் உலகென்றும், மேற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், ஆசியாவின் யப்பான் ஆகிய கைத்தொழில் வளர்ச்சி மிக்க நாடுகள் இரண்டாம் உலகநாடுகள் என்றும், பிற அபிவிருத்தி அடைந்து வரும் ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள், மூன்றும் உலகமென்றும். வகையீடு செய்யப்படுகின்றன. இதை விட கல்வியலாளர்களால் பிறிதொரு வகையீடு செய்யப்படுகின்றது இவ் வகையீட்டின்படி முதலாளித்துவ நாடுகள் ( அமெரிக்க ஐக்கிய நாடு, பிரித்தானியா, மேற்கு ஜெர்மனி, பிரான்சு போன்ற நாடுகள் ) முதலாம் உலகைச் சார்ந்தவை என்றும்; சோசலிச நாடுகள் எனக் கூறப்படுபவை இரண்டாம் உலகைச் சார்ந்தவை என்றும்; ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்காவின் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் மூன்றும் உலகைச் சார்ந்தவை என்றும் வகையீடு செய்யப்படுகின்றன. இவ்வாறு உலகை மூன்று மண்டலங்களாக வகையீடு செய்வதில் வெவ்வேறு கண்ணோக்கிலான வழிமுறைகள் காணப்படினும் மூன்றும்மண்டல நாடுகள் என வரும் பொழுது எல்லா வகையீடுகளும் அபிவிருத்தி அடைந்து வரும் வறிய நாடுகளை மூன்றும் உலகிக்குள் வைத்து வகையீடு செய்கின்றன எனத் தீர்மானிக்க இடமுண்டு. இவ்வகையில் மூன்றும் உலகநாடுக்ள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்பது தெளிவாகின்றது.

இன்று அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றும் மண்டல நாடுகள் தமது அபிவிருத்திக்கான பாதையில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அவற்றுள் நான்கு பிரச்சினைகள் கூர்ந்த நோக்கிற்குரியவை அவை வருமாறு;

(1) மூலதனப் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகள்.

(2) விஞ்ஞான தொழில்நுட்பத் துறையிலான பிரச்சினை.

(3) முகாமைத்துவத் திறன் தொடர்பான பிரச்சினைகள்.

(4) பண்பாட்டுத் துறையிலான பிரச்சினைகள்.

இந்த நான்கு பிரச்சினைகளும் மூன்றும் உலகின் அரசியல் துறையோடு நேரடித் தொடர்பு உடையவை. ஆயின் இக்கட்டுரை அது பற்றிய ஆய்வாக இல்லாமல் மூன்றும் உலகின் விஞ்ஞான தொழில்நுட்பத் துறையிலான பிரச்சினைகளின் அடிப்படை விடயங்களையே ஆராய முற்படுகின்றது.

பொதுவாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுக்ளின் மூலதன விஞ்ஞான, தொழில்நுட்ப, முகாமைத்துவ போதாமைகளை நிவர்த்தி செய்ய அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தங்கி இருத்தல் ஒரு வழிமுறையாக கருதப்படுகின்றது. அதாவது அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றும் உலகின் அபிவிருத்திக்கு அன்னிய உதவி ஒரு முக்கிய தீர்வு வழியாகக் கொள்ளப்படுகின்றது. இதன்வாறு பெரும்பாலான மூன்றும் உலக நாடுகள் தமது விஞ்ஞான தொழில்நுட்பப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள பின்வரும் முயற்சிகளை எடுத்து வருகின்றன;

(1) அபிவிருத்தியடைந்த மேற்குலகில் இருந்து விஞ்ஞான தொழில் நுட்பவியலாளர்களை இறக்குமதி செய்தல்.

(2) மேற்குலகின் விஞ்ஞான தொழில் நுட்ப பயிலும் இடங்களை நோக்கி பயிலுனர்களை ஏற்றுமதி செய்தல்.

மேற்படி முயற்சிகளை கடந்த கால அனுபவங்களைக் கொண்டு நோக்கும் பொழுது மூன்றும் உலகைப் பொறுத்தவரை அவைகள் தோல்வியில் முடிந்தமையே வரலாறு ஆகும். இத் தோல்விகளும் அதன் படிப்பினைகளும் மூன்றும் உலகின் தேசபக்த அறிவு ஜீவிகளைப் பலவாறும் பாதித்துள்ளன. இப் பாதிப்பு மேற்குலகிற்கு எதிரான மனோபாவங்களை இவ் அறிவு ஜீவிகளிடையே ஏற்படுத்தியும் உள்ளது. ஆயினும் மேற்படி அறிவு ஜீவிகள் மூன்றும் உலகின் விஞ்ஞான தொழில் நுட்பப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குரிய கருத்துத் தளத்தினைச் சரியாக புரிந்து கொண்டார்கள் என்று கூறுவதற்கு இல்லை. இன்றும் கூட மூன்றும் உலகின் கணிசமான அறிவு—ஜீவிகள் தமது நாடுகளின் விஞ்ஞான தொழில் நுட்பம் பிரச்சினைகளுக்கான திறவுகோல் மேற்குலகில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவே கருதுகின்றூர்கள். அதாவது தமது நாடுகளின் கைத்தொழில் பொருளாதாரத் துறையின் அபிவிருத்திக்கு மேற்குலகு ஈட்டி வைத்துள்ள தொழில்நுட்பத் திறன்களையே கைக் கொள்ள விரும்புகின்றனர். ஆயின் அத்தொழில்நுட்பத் திறன்களை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெற்று சுதந்திரமான முறையில் நாட்டை அபிவிருத்தி செய்துவிடாத வகையில் அபிவிருத்தி அடைந்த மேற்குலகு நாடுகள் வஞ்சனையும் சதியும் புரிவதாகவே மூன்றும் உலகின் அறிவு ஜீவிகளில் பலர் கருதுகின்றனர். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கைத்தொழில் துறையில் விருத்தியடையுமாயின் அது மேற்குலகின் கைத்தொழில் துறையின் சந்தை வாய்ப்புக்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகமாக அமையும். எனவே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கைத்தொழில் நுட்பத் திறன்களைப் பெற்று வளர்வதை மேற்குலகு வரும்போது அவர்களின் ஏகாதிபத்திய வர்க்க நலன் அதற்கு இடம் தராது என்ற வகையில் மேற்கு உலகு தமது தொழில் நுட்பத் திறன்களை கீழைத்தேய அபிவிருத்தி அடைந்துவரும் மூன்றாம் உலகு பெற்றுவிடாதபடி வஞ்சனையும் சதியும் புரிகின்றன என மூன்றாம் உலகு அறிவு ஜீவிகள் கருதுவதில் பாதி உண்மை அடங்கி உள்ளது. ஆனால் அதுவே முழுமையான உண்மையாகிவிடாது. முழு உண்மையை விளங்கிக்கொள்ள மேற்கு உலகின் விஞ்ஞான தொழில் நுட்பம் தொடர்பான அடிப்படையான விடயங்களை விளங்கிக்கொள்ளவேண்டும்.

கி. பி. 15ம் நூற்றாண்டளவில் மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவியல் மறுமலர்ச்சியையும் அதையொட்டி ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியும் அதன் விளைவாக எழுச்சி பெற்ற முதலாளித்துவ அரசியல் பொருளாதார நோக்கோடும் தொகையீடு செய்யப்பட்டதே மேற்குலகின் விஞ்ஞான தொழில் நுட்பத் திறன்கள் ஆகும். இதற்கு இணங்க மேற்கு உலகின் விஞ்ஞான தொழில் நுட்ப ஈட்டங்களை ஐரோப்பிய விஞ்ஞான தொழில் நுட்பம் எனக் கூறுதலே பொருத்தம் ஆனது ஆகும்.

ஐரோப்பிய விஞ்ஞானம் என்பது அதன் முதலாளித்துவ சுரண்டல் நோக்கை அடிப்படையாக வைத்தே உருவாக்கம் செய்யப்பட்டதாகும். கீழைத் தேயங்களின் மூலவளங்களைக் கொள்ளையிடவும். அவர்களின் சந்தைகளை ஆக்கிரமிப்புச் செய்வதும் என்ற நோக்கிலேயே ஐரோப்பிய முதலாளித்துவம் தனது விஞ்ஞான தேட்டங்களை உருவாக்கம் செய்தது. எனவே முதலாளித்துவ சுரண்டல் இலக்குகளை நோக்காய் கொண்டு உருவாக்கம் பெற்ற ஐரோப்பிய விஞ்ஞானத்தை அதே முதலாளித்துவ உலகினால் சுரண்டலுக்குள்ளாக்கப்பட்டிருக்கும் மூன்றாம் உலகு தனது அபிவிருத்திக்கு கருவியாகக் கொள்ள முடியுமா என்ற கேள்வி அடிப்படையான நியாயமான கேள்வியே ஆகும். ஆனால் இந்த அடிப்படையான கேள்வியை மூன்றாம் உலகின் பெரும்பாலான அறிவு ஜீவிகள் கருத்தில் கொண்டதாக இல்லை. இதற்கான காரணம் மூன்றாம் மண்டல நாடுகளின் விஞ்ஞான தொழில் நுட்பக் கல்வியானது இன்னமும் மேற்குலகச் சார்பையும் அணுகுமுறைகளையும் கொண்டு இருப்பதே ஆகும். இன்றும்கூட மூன்றாம் உலகின் பல்கலைக்கழகங்கள் தமது பாட விதானங்களை பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ் பல்கலைக்கழகங்களின் பாடவிதானங்களை ஒட்டியே அமைத்துக்கொண்டுள்ளன என்பது கவனத்திற்கு உரியது. இந்த அணுகுமுறைகளில் இருந்து விடுபடாத வரையில் மூன்றாம் உலகின் நாடுகள் தமது விஞ்ஞான தொழில்நுட்பப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது இயலாது. இது தொடர்பாக எகிப்தின் பிரபல பொருளியல் அறிஞர் இஸ்மயில்-ஸப்ரி அப்துல்லா அவர்கள் கூறுவது கவனிக்கத்தக்கது.

''மூன்றாவது உலகம் தன்மீது திணிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி முறை ஒன்றில் உண்மை நிலையை ஒத்ததாகவோ அல்லது விரும்பத்தக்கதாகவோ இல்லையென்பதை மேன்மேலும் உணர்ந்து வருகிறது. இது படுமோசமான சார்பு நிலையாகும். புத்திபூர்வமான சார்பு நிலை மேற்கின் சரித்திர மாதிரி ஒப்பற்றதென்பதை நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். ஐரோப்பிய-அமெரிக்க வாழ்க்கை முறையிலேயே முன்னேற்றம் அடைய முடியுமென்பதை நாம் கருதி வந்துள்ளோம். இந்தக் கோணத்திலிருந்து நோக்கும்பொழுது அபிவிருத்தி என்பது சிக்கலற்ற ஒரு சரித்திர தாமதம் மட்டுமேயாகும் எனவும் எங்களை முந்திக்கொண்டவர்களின் மூலதனமும், தொழில் நுட்பவியலும் என்ற மர்மத்தின் திறவுகோலை வைத்திருப்பவர்களின் உதவியுடன் இதை ஈடு செய்துவிட முடியுமெனவும் கருதப்படுகின்றது... முப்பது வருடங்களாக (இந்த நம்பிக்கையின் அடிப்படையில்) நடைபெற்ற முயற்சிகளும், மாயத்தோற்றங்களுக்கும் பின் பெரும் உண்மையில் பயணத்தை தொடங்க்வில்லை என நாம் கூறமுடியும்''.

இஸ்மயில்-ஸப்ரி அப்துல்லா அவர்களின் இக்கருத்து மூன்றாம் உலகு ஐரோப்பிய விஞ்ஞானத்தை முன்மாதிரியாக கொள்வதை நிராகரிக்கின்றது. அப்துல்லா அவர்களின் கூற்று மட்டும் அல்ல ஐரோப்பிய விஞ்ஞானத்தின் பரம்பலும் இவ்வுண்மையை அழுத்தியே காட்டுகின்றது. அதாவது சில வருடங்களுக்கு முன்னர் ஐ. நா. சபையினால் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விபரத்தின்படி ஐரோப்பிய விஞ்ஞானத்தின் அறிவுப் பரம்பலில் 98% மேற்குலக முயற்சிகளிலும் 2% மட்டுமே மூன்றாம் உலகிற்கு உரியது எனவும் காட்டப்பட்டுள்ளது. இப்புள்ளி விபரம் எமக்கு விளக்குவது என்னவெனில் ஐரோப்பிய விஞ்ஞானத்தின் உருவியல் மட்டும் இன்றி அதன் பரம்பலும்கூட மேற்குலகச் சார்புத் தன்மை கொண்டவை என்பதையே ஆகும். இன்னும் விளக்கிக் கூறுவதாயின் நவீன விஞ்ஞானம் எனக் கூறப்படும் ஐரோப்பிய விஞ்ஞானத்தின் பிரதான சிந்தனைகள் மேற்கிலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்பதேயாகும். எனவேதான் மேற்படி ஐரோப்பிய விஞ்ஞானம் என்ற மர்மத் திறவுகோலைப் பெற்றுவிடுவதால் மூன்றாம் உலகு தனது அபிவிருத்திப் பாதையில் எதிர்நோக்கும் விஞ்ஞான தொழில்நுட்பப் பிரச்சினைகளை தீர்த்துவிட முடியாது என்பதைத் திடமாகக் கூறமுடிகின்றது. ஆகவே மூன்றாம் உலகினர் தமது சமூக தேவையினையும் இயற்கைச் சூழலையும் இயல் சக்தியையும் அடிப்படையாகக் கொண்டு தமக்கே உரிய விஞ்ஞான தொழில் நுட்பத் திறன்களை சுதந்திரமானதாக உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

உலகின் விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வுகள் இருவகையாக நடத்தப்படுவதுண்டு.

1. அடிப்படை ஆய்வு

2. பிரயோக ஆய்வு.

மூன்றாம் உலகின் மரபு வழிப்பட்ட அறிவியலாளர்கள் கருதுவது என்னவெனில் மூன்றாம் உலகின் வறுமை மூன்றாம் உலகில் அடிப்படை ஆய்விற்கு இடம்தராது என்பதாகும். இதற்கு அவர்கள் கூறும் காரணம் அடிப்படை ஆய்வுத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய செலவீட்டிற்கு உரியவை. அதனைத்தாங்க மூன்றாம் உலகால் இயலாது என்பதாகும். எனவே மேற்குலகின் ஆய்வைச் சார்ந்து பிரயோக ஆய்வே சாத்தியம் எனக் கருதப்படுகின்றது. இக்கருத்தும் தவறானது ஆகும். மேற்குலகின் அடிப்படை ஆய்வு முன்மாதிரியை பின்பற்ற முயல்வதின் விளைவே இக்கருத்தாகும். மூன்றாம் உலகினர் தமது வளங்களினதும், தேவைகளினதும், இயல்பு சக்தியினதும் ஆற்றலுக்கு ஏற்ப தமது அடிப்படை ஆய்வுகளையும் பிரயோக ஆய்வுகளையும் திட்டமிட்டுக்கொள்ளமுடியும். தலைவர் மாஓ-சே-துங் அவர்களின் காலத்து சீனா இதற்கான முன்மாதிரியை உலகிற்கு வழங்கி உள்ளது.

மூன்றாம் உலகினர் மத்தியில் பரவலாக ஒரு மூடத்தனமான நம்பிக்கை காணப்படுகின்றது. விஞ்ஞான விவகாரங்களில் அறிவுச் சிறப்புடையோர் மேற்குலகினர் தான் என்பதே அந்த மூடத்தனமான நம்பிக்கையாகும். ஆயின் உலகின் அறிவியல் வரலாறு இதற்கு எதிராகவே உள்ளது. மூன்றாம் உலகினரின் நம்பிக்கை மட்டும் இன்றி மேற்குலகின் அறிவியல் வரலாற்றைக் கூறும் ஆசிரியர்களும் மேற்படி தவறான கருத்தையே பிரச்சாரம் செய்துவந்துள்ளனர். உதாரணமாக ஐரோப்பிய விஞ்ஞான வரலாற்றின் ஆசிரியர் எனக் கூறப்படும் 'நீட்ஹாம்' என்பவர் ஐரோப்பிய விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்பது ஐரோப்பாவின் உட்புற விசையிலேயே தங்கி இருந்தது என்கின்றார். வரலாற்றின் உண்மை விபரங்களைத் திரித்துக்கூறும் இக்கூற்றிக்கு எதிராக பல உதாரணங்களைத் தரமுடியும். ஆயினும் இவ்விடத்தில் சில உதாரணங்களை மட்டும் தருகின்றோம். ஐரோப்பிய விஞ்ஞானம் என்பது எகிப்தியரின் எண்கணித அறிவையும், சுமேரிய மக்களின் தூயகணித அறிவையும், கிரேக்கரின் கேத்திர கணித அறிவையும் இந்தியரின் அட்சர கணித அறிவையும், சீனரின் காந்தவியல் அறிவையும் உள்வாங்கிக்கொண்டதின் உருவாக்கமே ஆகும். மேற்குலகு அறிவியல் இருளில் மூழ்கி இருந்தபொழுது கீழைத்தேயங்கள் அறிவியல் சிறப்புக்கள் பலதைப் பெற்று இருந்தன என்பது மறைக்கப்படமுடியாத உண்மை. குறிப்பாக சோழர் காலம் எனக் குறிப்பிடப்படும் தமிழக வரலாற்றின் கி. பி. 9ம் நூற்றாண்டளவிலான தமிழகத்தின் அறிவியல் ஈட்டம் அன்றைய மேற்குலகின் அறிவியல் ஈட்டத்தினை விடவும் பல்படி உயர்வானது. கடற்பயணங்களின் மாபெரும் கண்டுபிடிப்பாளர் எனக் கருதப்படும் ''வாஸ்கொடகாமா'' அவர்களும் தனது கடற் பயணத்திற்கு இந்திய, அராபிய மாலுமிகளைப் பயன்படுத்தினார் என்பது மேற்குலகு வெளிப்படுத்த விரும்பாத ஓர் உண்மையாகும்.

ஆக ஐரோப்பிய விஞ்ஞானம் என்பது ஏதோ 'நீட்.ஹாம்' போன்றவர்கள் கூறுவதுபோல் ஐரோப்பாவின் தனிச் சிறப்பு அன்று. பிற்காலத்தில் அவர்கள் உருவாக்கிக்கொண்ட சாம்ராஜ்ஜிய விஸ்தரிப்பின் மூலம் உலகின் பல பாகங்களிலும் இருந்து அவர்கள் பெற்றுக்கொண்ட அறிவியல் மூலகங்களின் தொகுப்பே ஆகும். கீழைத்தேய நாடுகளின் அறிவியல் ஈட்டங்களை அவர்கள் தமக்கு ஏற்றவகையில் தொகுத்து ரூபப்படுத்திக்கொண்டனர். அதுவே ஐரோப்பிய விஞ்ஞானம் ஆகும்.

எனவே மூன்றாம் உலகினர் தமது விஞ்ஞானச் சிந்தனைத் திறன் பற்றி ஐயுறவோ அல்லது நம்பிக்கையீனப்படவோ வேண்டியதில்லை. தமது நாடுகளின் தேவைகள், சூழல், வளம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அவர்களால் தமக்கென விஞ்ஞான, தொழில்நுட்ப வழிமுறைகளை உருவாக்கிக்கொள்ள முடியும. இதற்கு முதல் நிபந்தனையாக மூன்றாம் உலகினர் ஏகாதிபத்தியங்களின் சகலவிதமான பிடிமானங்களிலும் இருந்து தம்மை முழுமையாக விடுவித்துக்கொள்ள வேண்டும். அதாவது மூன்றாம் உலக நாடுகளில் அரசியல் ரீதியான மாற்றங்களும், சமூக புரட்சிகளும் உருவாக்கப்படல் வேண்டும். புரட்சிகரமான அரசியல் சமூக மாற்றத்தோடு தொகையீடு செய்யப்பட்டதாகவே புரட்சிகரமான விஞ்ஞான தொழில்நுட்ப அணுகுமுறைகள் மூன்றாம் உலகிற்கு சாத்தியம் ஆகும்.

## வேண்டுகோள் !

மட்டக்களப்பு பிரதேசத்தின் பாரம்பரியக் கலைகள் காலத்திற்குக்காலம் தோன்றிய கலைஞர்களால் வளப்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆயினும் இவை பற்றிய பூரண விபரம் வெளியுலகு அறியாதது பெருங்குறையாகும். இவற்றின் விழுமியங்களை வெளிக் கொணரவும், ஆய்வு செய்யவும் ''வயல்'' விரும்புகின்றது. நமது வாசகர்கள் சிரத்தையெடுத்து பின்வரும் தகவல்களைத் தந்து உதவுமாறு வேண்டப்படுகின்றனர்.

1. கலைஞர் பெயர்:

2. கலைஞரின் பூரண விபரம் (முகவரி உட்பட);

3, கலையாக்கங்கள் பற்றிய விபரம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வு இலா ஊனங்கள்...

— பாரதிபுரம் இ. நடனசேகரம் —

இது கரங்களல்ல
கதாயுதங்கள்
பஞ்சப் பேயினை
அடித்து விரட்டும்
அசுரக் கணைகள்...!
எங்கள்...
விரல் இடுக்குகளில்
பழுத்துக் கிடப்பது
பழங்களல்ல
பச்சை ரணங்கள்...!
ஏரைப் பிடித்து
போராடியதால்
ஏற்பட்ட காயத் தழும்புகள்!
எங்கள்...
கையின் ரேகைகள்
அழிந்து விட்டன — இதனால்,
எங்கள்
ஜாதகமும்
அழியத் தொடங்கி விட்டன!
இது... ஒரு
தனி வீட்டிற்கான
அழிவு அல்ல...
ஒரு
நாட்டிற்கான அழிவு...!
ஓ......
இன்னும் எங்கள்
ரணங்கள் ஆறவில்லை.
அதுவரை
நாங்கள்
இந்த நாட்டின்
ஓய்வு இலா ஊனங்கள் தானே!

## வறுமைக் கோடு

வி. மைக்கல் கொலின்

நெடுங் கோடு.
அகலக் கோடு.
மகரக் கோடு.
கடகக் கோடு.
உலகின் நடுவே
மத்திய கோடு வேறு
ஆனால் எங்கே ஐயா!
எங்கள் வறுமைக் கோடு.
தேடித் தேடி
கண்கள் பூத்து
கால்கள் ஓய்ந்து
மனமோ சலித்து
உடலோ தளர்ந்து
........ ..............
......ஓ புரிகிறது!
வறுமைக் கோட்டை
வரைவதற்கு மறந்து
விட்டனரோ?

## வேறென்ன செய்யலாம்?

— சுகந்தன் —

கண்வானம் சிவந்திருக்க
கவலை மேகம்
நீர் பொழிய
என் தாய் போலொருத்தி
நேற்றிரவு
என் எதிரில் வந்து நின்றாள்!
யாரென்றேன் நான்.
அவள் -
மட்டக்களப்புத் தாயென்றாள்.
ஏன் அழுகை என்றேன்
உள் மோதலால்
ஊர் எங்கும் பிணமென்றாள்!
ஓ......
நானும் அழுதேன்.
வேறென்ன செய்யலாம்?



# இவன் மனிதன்

மங்கையர்க்கரசி நாகப்பன்

இனிய காலைநேரத்திற்குரிய பூபாளமாக புள்ளினங்களின் குரல் ஒலிக்க தூரத்தே ஒலித்த கோயிலின் மணியும் அதனுடன் சேர்ந்து ஒலித்தது. நடந்து முடிந்தவற்றின் சுவடுகளை இழந்துவிட்ட மனம் மிகவும் இலேசாகி, புலர்ந்திருக்கும் புதிய காலையை புது உற்சாகத்துடன் எதிர்பார்க்கத் தயாராகிவிட்டிருந்தது. படுக்கையிலிருந்து எழுந்து ''பிரஸ்''உம் கையுமாக வெளியே வாசல்பக்கமாக வந்தான் ரகு. 'ம்ம்மா' 'ம்ம்மா' கன்றின் அழைப்பிற்கு பதிற்குரல் கொடுத்தது அந்த வெள்ளைப்பசு. கன்றுடன் வீதியிற் போகும் அந்தத் தாய்ப்பசுவைப் பார்த்தான் ரகு. அவன் கண்களில் அவனையறியாமலேயே நீர்த்துளிகள் முட்டிக்கொண்டு நின்றன. புதிய காலைப்பொழுதை இனிய பூபாளத்துடன் வரவேற்கத் தயாராகியிருந்த மனது ஒரு நொடியில் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு நடந்து முடிந்துவிட்ட அந்தச் சோகமான அந்தப் பயங்கரமான சம்பவத்தையே நினைத்துப் பார்க்கத் தொடங்கியது.

அன்று ஒரே அலைச்சலாகப்போய் விட்டது. அவன் நினைத்துச்சென்ற காரியங்கள் எதுவுமே முடியவில்லை. படித்துவிட்டு வேலைதேடி அலைவதென்பது எவ்வளவு கஸ்டமான காரியம் என்பது அவனுக்கு இப்போதுதான் நன்கு புரிநதது. இந்த வேலைதேடும் படலத்துடன் ஒப்பிடும்போது படிப்பது மிகச்சுலபமான காரியம் என அவன் தன் மனதுக்குள் சொல்லிக்கொண்டான். காலையில் உள்ளே போட்டுக் கொண்ட இடியப்ப விள்ளல்கள் வயிற்றிலிருந்து விடைபெற்றுக் கொண்டு நீண்ட நேரமாகி விட்டது போலும், அதனாற்றான் வயிறு வேறு ஓலமிட்டுக் கொண்டிருக்கிறது. அவன் மெதுவாக கையினால் வயிற்றைத் தடவிவிட்டுக் கொண்டான். ஏமாற்றங்களோடு பசிக்களைப்பும் சேர்ந்து கொள்ள ரகு தள்ளாடியபடியே வீட்டைநோக்கி நடந்து கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கேற்றை'த் திறந்துகொண்டு உள்ளே நுழையும்போதே ''அம்மா பசிக்குது'' என்று குரல் கொடுத்த படியே வந்தான் ரகு. ''ம் கஸ்ரப்பட்டு வேல தேடிட்டு வந்திருக்கான் உன்னுடை பிள்ள, களச்சுப் போயிருப்பான். சாப்பாடப் போடு'' அப்பாவின் குத்தல்ப் பேச்சு அவனுள் ஆத்திரத்தை மூட்டியபோதும் அடக்கிக் கொண்டான்.

'நீங்க வேணுமெண்டா இருந்து பாருங்கோ நான் ஒரு நாளைக்கு என்னுடை தகமையை மட்டும் பயன்படுத்தி வேலை எடுத்துக் காட்டத்தான் போறன்.'

'ஓமடா ஓம் நீ வேல தேடிட்டு வாறதுக்கிடையில உனக்கு பென்ஷன் எடுக்கிற காலம் வந்துடும்.' அதற்கு மேலும் அவருடன் பேச்சுக் கொடுக்க விரும்பாதவனாக மௌனமானான் ரகு. ஆனால் அவனது தந்தை அவனை விடுவதாக இல்லை.

'இவர்தான் ஊரிலேயே பெரிய மனுஷன். நீதி, நியாயம், நேர்மை எண்டு பேச வந்திட்டாரு. அதையெல்லாம் எவன்டா இப்ப பாக்கிறான். நேர்மையான வழியில வேல எடுக்கப்போறாராமே. நேர்மையான வழியில'

அதற்கு மேலும் ரகுவால் பொறுக்க முடியவில்லை. ''ஓமப்பா நீங்க சொல்லுறது உண்மைதான். உங்களப்போல ஆக்கள் தான் ஊருக்குள்ள இண்டைக்கு அதிகமா இருக்காங்க. அதாலதான் திறமைக்கும் தகுதிக்கும் மதிப்பில்லாமப் போய், பொய்யும் பித்தலாட்டமும் மட்டுமே உலாவிக்கொண்டிருக்கு'' 'என்னடா கண்டறியாத திறம? நீயும் தான் கட்டுக்கட்டா 'சேட்டிக்கேற்றுக்களை தூக்கிக்கிட்டு அலையுறு. போனகிழம நீபோன 'இன்டர்வியூ முடிவென்னண்டு தெரியுமா? சங்கக்கடை சுப்பையர்ர பெடியனுக்குக் கிடைச்சிருக்கு. என்ன பேச்சையே காணம். அவன் படிச்சது வெறும் ஓ. எல் தான். உன்ர பி. ஏ யைக் கொண்டு உடைப்பில போடு ரகுக்கு அதைக் கேட்டபோது உண்மையிலேயே வேதனையாகத்தான் இருந்தது. ஏன் ஆத்திரமாகக்கூட வந்தது. யார்மீது ஆத்திரப்படமுடியும் அவனால்? 'ஒரு வேளை அப்பா காட்டுவதுதான் சரியான வழியோ? எல்லோரும் போகும் பாதையில் நான் மட்டும் போகமாட்டேன் என்று எதற்காக அடம்பிடிக்கவேண்டும்' அவன் தன்னையே கேட்டுக்கொண்டான் 'என்ன இது. நானா இப்படி யோசிக்கிறேன்? எல்லோரும் இப்படி விதண்டாவாதம் பேசிப்பேசித்தான் மந்தைக் கூட்டமாக மாறிக்கொண்டு வருகிறோம். என்ன நடந்தாலும் முன்வைத்த காலைப் பின்வைக்கக் கூடாது' அவன் தனக்குள்ளேயே உறுதிசெய்து கொண்டான்.

''என்னடா இனியாவது உனக்குப் புத்தி சரிவருதோ பாக்கிறன்', அப்பாதான் சொல்கிறார்.

''வேண்டாமப்பா உங்க நண்பர்கள் தயவில நாலுபேரோட காலப்பிடிச்சுத்தான் எனக்கு வேல கிடைக்குமெண்டா அந்த வேல எனக்கு வேண்டாம். அதுக்காக நீங்க சிரமப்படவும் வேண்டாம்'' சொல்லிவிட்டு, கையைக் கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான் ரகு.



'ம் நாய்வால நிமித்த யாரால முடியும்'' அவனது அப்பாவும் அத்தோடு நிறுத்திக்கொண்டார்.

''இந்த மாட்டுச் சனங்களுக்கு எத்தின நாள்தான் சொல்லியாச்சு இந்த மாடுகள வீட்டில கட்டிவையுங்க எண்டு. இண்டைக்கு இவையளுக்கு ஒரு பாடம் படிப்பிக்காம விடுறதில்ல. அடியே பார்வதி ஒரு கயிறு எடுத்துக்கொண்டுவா'' காட்டுக் கத்தலாக கத்தினார் சின்னையா மாஸ்டர். சாப்பிட்ட பாதியில் ரகுவும் எழுந்து ஓடிவந்தான். துள்ளிக் குதித்துக்கொண்டு கன்று ஓடிவிட கால்தடுக்கி விழுந்துவிட்ட பசுமாடு அவரிடம் சரமாரியாக வாங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு அடிக்கும் வாய்விட்டுக் கத்தியது பசுமாடு. வீதியில் நின்றபடி 'ம்மா' 'ம்மா' என்று அலறிக் கொண்டிருந்தது கன்றுக்குட்டி. கன்றுக்குட்டியின் அலறலைக் கேட்க பசுமாட்டிற்குப் பொறுக்கவில்லையோ என்னவோ, தனது அபயக்குரலைக் கேட்டுத்தான் தனது குட்டியும் அலறுகிறது என்பதைப் புரிந்து கொண்டதாலோ மூச்சை அடக்கிக் கொண்டு சத்தமின்றி அடிகளை வாக்கிக் கொண்டது பசுமாடு. இருவிழிகளும் நீரைக் கொட்டிக் கொண்டிருந்தன. அதற்கு மேலும் பார்த்துக் கொண்டிருக்கப் பொறுக்காத ரகு ஓடிவந்து அவனது தந்தையின் கையிலிருந்து தடியைப் பறித்துத் தூர எறிந்தான். கீழே கிடந்த மாட்டைக் கை கொடுத்துத் தூக்கினான் முன்னங்கால்களிலொன்றை நொண்டிக் கொண்டே வெளியே ஓடியது அந்தப் பசு மாடு. வெளியே நின்றிருந்த கன்றுக்குட்டி பாதிவழிக்கு ஓடி வந்து தாயைக் கட்டிக்கொண்டது. அதைச் சுற்றிச் சுற்றி வந்தது. தனது நாக்கினால் தாயின் முகத்தை நக்கியது. தான் பட்ட அடிகளின் வேதனையைக் கூட அந்த அன்பு வெள்ளத்தில் மறந்து விட்டது போல் 'ம்மா' என்று மகிழ்ச்சிக்குரல் கொடுத்தது பசுமாடு. பார்த்துக் கொண்டிருந்த ரகுவின் விழிகளைக் கண்ணீர்த்திரை மறைத்தது.

''அறிவிருக்காடா உனக்கு'' ஆத்திரத்தோடு கேட்டார் சின்னையா மாஸ்டர். ரகு ஒரு கணம் ஒரேயொரு கணம் அவர் கண்களை உற்று நோக்கினான். மறுகணம் முகத்தைத் திருப்பிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான். மாட்டிற்கு இருக்கும் அறிவுகூட மனிதருக்கு இல்லையே என்று நினைக்க அவனுக்கு வேதனையாகத்தான் இருந்தது இந்த உலகில் மனிதர்கள் வாழ்கிறார்களா என்ற சந்தேகம் கூட அவனுக்கு ஏற்பட்டது ''என்ன உலகமிது'' என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான். இந்த நிகழ்ச்சிகள் எவையுமே தன்னைப் பாதிக்கவில்லை என்பது போல் கல்லாக நின்றிருந்தாள் ரகுவின் தாய் பார்வதி. ரகு கையைக் கழுவிக் கொண்டான்.

''ஏன் ராசா போட்ட சாப்பாடு அப்படியே கிடக்கு. பாதியில ஏன் கையைக் கழுவிக்கொண்டு போறாய்?'' பார்வதிதான் கேட்டாள். ''பசிக்கல்லம்மா'' ரகு சுருக்கமாக முடித்துக்கொண்டான்.

''என்ன ராசா இது. பசிக்குது எண்டு தானே அரக்கப்பரக்க ஓடி வந்த நீ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வந்த பசி போயிட்டுதத்மா" தலையைக் குனிந்து கொண்டே பதில் சொல்லிவிட்டு தனது அறைக்குள் போய் படுத்துக்கொண்டான் ரகு. நடந்து முடிந்து விட்ட நிகழ்ச்சி அவன் மனதை வேதனைப்படுத்திக் கொண்டே இருந்தது. எவ்வளவு முயன்றும் அவனால் அதை மறக்கவேமுடியவில்லை. அந்தச் சம்பவம் நடந்த இரண்டாவது நாள் அந்தப் பசுமாடு செத்துப்போனதை கேள்விப்பட்டபோது ரகுவின்வேதனை மேலும் அதிகரித்து தனது தந்தை ஒரு கொலைக்குற்றவாளி என்றே அவன் மனம் எடை போட்டது. இவர்களுக்கெல்லாம் தண்டனை வழங்க ஆண்டவனாற்கூட முடியுமா என்பது சந்தேகத்திற்கிடமாகவே இருந்தது அவனுக்கு "ரகு எவ்வளவு நேரமாத்தான் முகம் கழுவுறாய் வந்து தேத்தண்ணியைக் குடியன் தம்பி" பார்வதியின் குரல் அவனைப் பழைய நினைவுகளிலிருந்து மீட்டு வந்தது.

"ரகு நான் கோயில் நிர்வாகசபைக் கூட்டத்துக்குப் போறன், இப்ப ராசையா மாஸ்டரும் வேறரெண்டு பேரும் வருவாங்க. அவங்களோட போய் அந்தச்சந்தி கோயில் வளவில் இருக்கிற பொன்னம்மாளையும் குடும்பத்தையும் வெளிய தூக்கிப் போட்டுட்டு வாங்க" சொல்லிவிட்டு புறப்பட ஆயத்தமானார் சின்னையா மாஸ்டர். "என்ன மனிதர்களோ இதுகள். இருக்க இடமில்லாத அந்தக் குடும்பத்தைத் துரத்திப்போட்டு அப்பாவும் இவனுகளும் கோயில் வளவில என்ன செய்யப் போகுதுகள். சனங்களக் கஸ்டப்படுத்தியே பாக்கிறதில என்னதான் சந்தோசமோ தெரியவில்லை" ரகு தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

"இந்த வேலையளுக்கெல்லாம் நான்போகமாட்டன் எண்டுதெரியும் தானே, வந்தா அவங்கள இருக்கச் சொல்லுறன். நீங்களே கூட்டம் முடியவந்து கூட்டிக்கொண்டு போங்கோ" சொல்லிவிட்டு மேலும் அங்கே நிற்கப் பிடிக்காதவனாக உள்ளே போனான் ரகு.

காலையுணவை முடித்துக் கொண்டு புறப்பட்ட ரகு வாசிகசாலையில் சிறிது நேரம் இருந்துவிட்டு ஏதோ நினைவு வந்தவனாக அந்தக் கோயில் காணியை நோக்கி நடந்தான். ராசையா மாஸ்டரும் அவனது அப்பாவும் சிறிது தூரத்தில் நிற்க அவர்களது அடியாட்கள் தடிகளுடன் பொன்னம்மாவின் வீட்டுச் சாமான்களையெல்லாம் உடைத்துக் கொண்டிருந்தார்கள். பொன்னம்மாவின் மகன் நிலத்தில் மயங்கி கிடந்தான் என்ன நடந்திருக்கும் என்பதை அவனால் இலகுவாக ஊகிக்கமுடிந்தது. பாவம் பொன்னம்மாவின் மகன் வஞ்சகமில்லாமல் நன்றாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகத்தானே சின்னையா மாஸ்டர் முன்னேற்பாடாக அடியாட்களுடன் வந்திருக்கிறார். பொன்னம்மாவின் மகன் கண்ணைத்திறந்து பார்த்திருக்க வேண்டும் அதுதான் அடியாட்களில் ஒருவன் அவனருகே சென்று பார்க்கிறான் போலும். "இங்க இவன் முழிச்சிட்டான்" குரல் கொடுக்கிறான் ஒருவன். அவன் சாகவில்லை என்று சந்தோஷப்படுகிறானா? அல்லது சாகவில்லையே என்று கவலைப்படுகிறானா என்பதை அவன் குரலி



லிருந்து புரிந்து கொள்ள முடியவில்லை ரகுவால். "எண்டாலும் இவைக்குச் சரியான ஒரு பாடம் படிப்பிக்கவேணும், மாஸ்டர் யாரெண்டு நினைச்சு உங்களோட மோதப்பார்க்கிறான்கள்" தன் பங்கிற்கும் ஒருவன் சொல்லிவைக்கிறான். இதைவிட என்ன பாடத்தை இன்னும் படிப்பிக்கப் போகிறார்கள் ரகு தன்னையே கேட்டுக்கொள்கிறான் வலியிற் துடித்துக் கொண்டிருக்கும் தனது மகனைப் பார்த்து கண்ணீர் வடிப்பதா அல்லது தனது உடைமைகள் என்றிருந்த சட்டிகளும் பானைகளும் துண்டுகளாக சிதறிக் கிடக்கும் கோலத்தைப் பார்த்து வேதனைப்படுவதா என்று புரியாதவள் போல கல்லாக விரித்த தலையுடன் நிலத்தில் குந்தியிருந்தாள் பொன்னம்மா. ரகுவிற்கோ உடலெல்லாம் ஆத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்தது. "அப்ப நாங்க வாறம் மாஸ்டர்" அடியாட்கள் விடை பெற்றுக் கொள்ள சின்னையா மாஸ்டரும், ராசையா மாஸ்டருடன் திரும்பி வந்துகொண்டிருந்தார். வழியில் ரகுவும் அந்தப் பக்கமிருந்து வருவதை அவர் கண்கள் கவனித்துக் கொண்டன.

வீட்டிற்கு வந்ததும் வராததுமாக "டேய் ரகு இங்க வா நான் போகமாட்டன் எண்டு சொல்லிப் போட்டு பிறகேன்டா அங்க வந்த நீ" அவர் என்ன அர்த்தத்தில் கேட்கிறார் என்பது அவனுக்குப் புரியவில்லை. ரகு மெதுவாக அவரை நிமிர்ந்து பார்த்தான். "உங்களுக்கு ஒத்தாசையாக நான் வந்த நான் எண்டு நினைச்சீங்களோ?" மெதுவாகவே கேட்டான் ரகு. "அப்ப எதுக்கு வந்த நீ" அவர் ஆத்திரத்துடன் கேட்கிறார்.

"நீங்க எப்பிடியெல்லாம் மிருகங்களை விடக் கேவலமா நடந்து கொள்ளுறீங்க என்பதைப் பாக்கத்தான் வந்த நான். எப்பிடித்தான் ஒரு மனிதனை இன்னொரு மனிதனால் துடிக்கத்துடிக்க அடிக்க முடிகிறதோ? நான் ஒரு விசரன் இதப்போய் உங்களிட்ட கேட்டுக்கொண்டு. அண்டைக்கு பக்கத்து வீட்டுக்காரர் மேலுள்ள கோபத்த அவங்க வீட்டு மாட்டில காட்டினீங்களே! வேலியடைக்கும் போது ஏற்பட்ட தகராறு, வி. சீ எலக்சனில ஏற்பட்ட கோபம் எண்டு கொஞ்சம்கொஞ்சமாக எல்லாத்தையும் சேத்து வாய் பேசமுடியாத அந்த மிருகத்தின்மேல காட்டினீங்களே!! அதைவிட இது ஒண்டும் மோசமில்லைத்தான் இவனுக்காவது எங்க வலிக்குது எண்டு சொல்ல முடியுது: தன்னை அடிச்சவன் யாரெண்டு இனங்காட்ட முடியுது. ஆனா அந்த மாட்டுக்கோ இது ஒண்டும் செய்ய முடிந்திருக்காது. அடிபட்ட இரண்டாவது நாளே கன்றுக்குட்டி கதறக்கதற செத்துப் போச்சுதே அந்தப் பசுமாடு. அதால மட்டும் பேச முடிஞ்சிருந்தா.....? ஓ...... அப்பவும் என்ன நல்ல அப்புக்காத்து வழக்கில வெற்றி உங்களைப்போல ஆக்களுக்கு இதுகள் புதுசுமில்ல, கஷ்டமில்ல ஆனா ஒண்டு இது எண்டைக்கும் இப்பிடியே தொடராது. குனிந்த தலைகள் நிமிரும் பொழுது உங்கள் அதிகாரக் கொடிகள் அறும் அப்பா! உங்களை அப்பா எண்டு சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கு.

இண்டையோட உங்கட உறவு எனக்கு தேவையில்ல எண்டு முடிவெடுத்திட்டன் அசிங்கத்தனங்களின் மகனாக இருப்பதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதையாக இருப்பது மேல்!' என்று கூறிய ரகு வீட்டு வாசல் படியைத் தாண்டி விடுவிடுவென்று வெளியேறிக் கொண்டு இருந்தான். ஏதோ பேச வாயெடுத்த சின்னையா மாஸ்டர் பேச்சேவராமல் விறைத்து போய் நின்ருர். வீதி யால் நடந்த ரகு இந்த உலகமே தனது சொந்தம் என்ற வகையில் சலனமின்றி நடந்தான். என்ருலும் அவன் இதயத்தின் ஏதோ ஒரு மூலை வலியெடுத்த "அம்மா! அம்மா!!" என அலறத் தான் செய்தது. —(யாவும் கற்பனை)—

## அன்பான வாசகர்களே!

''வயல்'' ஏட்டின் முதலாவது இதழுக்கு நீங்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி. இது வர்த்தக நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதொன்றல்ல. சமூக நோக்கையே முனைப்பாகக்கொண்ட முயற்சி என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். எதிர்காலத்தில் பல சமூகநலத் திட்டங்களை அறிமுகம் செய்து அவற்றை அமுல் நடாத்தவும் நாங்கள் எண்ணியுள்ளோம். அதற்கு உங்கள் ஆதரவே தேவை. வயலை விதைத்தவர்கள் நாங்கள். அதனை விளையச் செய்வதில் உங்களுக்கே நிறைந்த பங்குண்டு.

இன்றே வயலின் சந்தாதாரராக ஆகுங்கள்; உங்கள் நண்பர்களையும் சந்தாதாரராக ஆக்குங்கள்.

### 'வயல்' சந்தாதாரர் விண்ணப்பம்

நா. சிவலிங்கேஸ்வரன், 30, பயனியர் வீதி, மட்டக்களப்பு.

பெயர்;.......................................................................

முகவரி:.......................................................................

.......................................................................

இத்துடன் வருடச் சந்தா 25/- (தபால் செலவு உட்பட) ரூபாய்க்குரிய காசோலை இல:................./காசுக்கட்டளை இல:............ .. இணைத்துள்ளேன்.

திகதி:.......................          ........................................ ஒப்பம்.



## சுதந்திரம் பெறவேண்டும்!

மதிமகன் எஸ். எம். ஜாபிர்

இறைவனே - நீ
இயற்றிய
மனிதப்பாடல்கள்
இன்று -
எங்கள்
தேசச்செவியில்
ஒலிக்க முடியாமல்
மதிப்பிழந்துவிட்டன!

மெய்கள்
''ரவை''களால்
துளைக்கப்பட்டு
மனிதஉயிர்கள்
மனிதாபிமானமற்று
மரிக்கும்காட்சிகள்
எங்கள் -
கவிதைகளைக்கூட
கண்ணீர் -
வடிக்கவைத்துவிட்டன!

சொந்தங்களை
சோகநதியில்
தத்தளிக்கவைத்துவிட்டு
''பயங்கரவாத''ச் சீல் -
பொறிக்கப்பட்டு
முகாம்களுள் இடப்பட்ட
பொதுமக்கள்படும் -
பரிதாபங்கள் - எங்கள்
விழிகளை(க்) -
குளமாக்குகின்றன!

இறைவனே - நீ
இன்னும்
மனிதப்பாடல்களை
இயற்றுதே...,
ஏனென்ருல் -
அவை - மீண்டும்
மதிப்பைப்பெற
எங்கள்நாடு -
மீண்டும் ஒருமுறை
சுதந்திரம்பெறவேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் சமூக பண்பாட்டியல் வரலாற்றுத் துறையில் பேராசிரியர் வானமாமலையின் பணி

—✶ பால - சுகுமார் ✶—

பேராசிரியர் வானமாமலை அவர்கள் மறைந்து ஆறு வருடங்கள் உருண்டோடி விட்டன. பேராசிரியர் அவர்கள் மறைந்தாலும் அவரின் பெயர் தமிழ் இலக்கிய உலகில் அழியாப் பெரும் இடத்தைப் பெற்று விட்டது. காரணம் அன்னுர் தமிழர் சமூக பண்பாட்டியல் வரலாற்றுத் துறைக்கு ஆற்றிய அரும் பெரும் பணிகள் தான். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நாட்டாரியிலாராச்சியின் முன்னேடியாகக் கருதப்படுபவர் பேராசிரியர் வானமாமலை அவர்களே ஆவார்.

தமிழ் உலகின் நாட்டாரியல் ஆய்வுத் துறையின் முதல்வராக கருதப்படுபவர் ''சாள்ஸ்கவர்'' என்பவர் ஆவார். கீழைத்தேயங்களைப் பொறுத்தவரையில் நாட்டாரியில் ஓர் ஆராய்ச்சி துறையாக அக்கறை கொள்ளப்பட்டமை ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே ஆகும். இவ்வகையில் ஐரோப்பிய கிறித்தவப் பாதிரிமார்கள் குறிப்பிடத்தக்கவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்கும் பொழுது காலத்திற்குக் காலம் காலத்தேவைகளின் பயனுய் செம்மை இலக்கிய உலகு நாட்டாரியெலின் பல்விடயங்களை தானும் உள்வாங்கி வளர்ந்து வந்துள்ளதைக் காணலாம். சிலப்பதிகார காலம் தொட்டு இருபதாம் நூற்றுண்டு இலக்கிய முயற்சிகள் வரை இதற்கு ஆதார சாட்சிகளாய் விளங்குகின்றன.

நாட்டாரியலின் கூறுகளான நட்டார் பாடல்கள், கதைகள் நடனங்கள், நம்பிக்கைகள், பழமொழிகள், விடுகதைகள், புராணக் கதைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள் ஆகிய கலைகள் பற்றியெல்லாம் தமிழின் செம்மை இலக்கியங்கள் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டும் அவற்றை பதிவு செய்தும் உள்ளதைக் காண முடிகின்றது. இவ்வகையில் சிலப்பதிகாரமும் ஆழ்வார்களினதும், நாயன்மார்களினதும் பக்தி இலக்கியங்களும் கி. பி. 13ம் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட நாயக்கர் கால தமிழ் இலக்கியங்களும் வியந்து கூறத்தக்கவை தமிழின் செம்மை இலக்கிய உலகிற்குப் புறம்பாக பண்டை நாளிலிருந்து நாட்டார் கலை முயற்சிகள் தமிழில் இருந்து வந்துள்ளதை தொல்காப்பியத்தின் ஆதாரம் கொண்டும் நிறுவமுடியும். இவ்வகையில் பேராசிரியர் வானமாமலை அவர்கள் மலேசியாவில் நடைபெற்ற முதலாவது தமிழராய்ச்சி மாகாநாட்டில் சமர்பித்த "Folic Motif in Cilappathikarm" ஆய்வுக் கட்டுரை குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையில் பேராசிரியர் வானமாமலை அவர்கள் சிலப்பதிகாரத்தில் காணப்பட்ட பல் வேறு நாட்டார் கலைகள் பற்றிய குறிப்புக்களையும், பதிவுகளையும் எடுத்துக் காட்டுகின்றுர். பேராசிரியர் வானமாமலை மட்டும் அன்றி வேறும் பல தமிழ் அறிஞர்கள் சிலப்பதிகாரத்திலும் பிற பண்டைய தமிழ் இலக்கியங்களிலும் காணப்படும் நாட்டாரியல் கூறுகளை பல சந்தர்ப்பங்களில் எடுத்து விளக்கியுள்ளனர்.

சிலப்பதிகாரத்தின் வேட்டுவவர் ஆய்ச்சியர்குரவை, கானல்வரி, ஊசல்பாட்டு, கந்தாக்கவரி, துன்பமாலையில் காட்டப்படும் குரவைக் கூத்து ஆகியவைகள் பண்டைக் காலத்தில் காணப்பட்ட நாட்டார் கலைகள் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் இடம் பிடித்தமைக்கான உதாரணங்களாக அறிஞர்களால் எடுத்துக் காட்டப்படும். அதேபோல் பக்தி இலக்கியங்களான திருவெம்பாவை, திருப்பாவை ஆகிய பாடல்கள் பண்டைநாளின் நட்டார் கலைகளில் ஒன்முகிய பெண்களின் மார்கழி நீராடல் என்ற கூத்து ஒன்றின் இசை மரபையும், பொருள் மரபையும் ஒட்டி படைக்கப்பட்ட இலக்கியங்கள் ஆகும். அதேபோல் நாயக்கர் காலத்தின் பள்ளு இலக்கியங்கள் குறவஞ்சி போன்றவையும் நாட்டார் மக்கள் மத்தியில் காணப்பட்ட உழத்தி பாட்டு, குறம் ஆகிய நாட்டார் கலைகளை அடியொற்றிப் படைக்கப்பட்ட இலக்கியங்களே ஆகும். இவ்வாறு தமிழர்களின் பண்டைய செம்மை இலக்கிய உலகில் ஆங்காங்கே நாட்டாரியல் கலைக்கூறுகளின் பிரதிபலிப்புக்கள் காணப்பட்டாலும் சமூக ரீதியான அக்கறை நோக்கோடு அவை ஆய்வு நோக்கில் அணுகப்படத் தொடங்கியமை ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே என்பதை திடமாகக் கூறலாம். ''சார்ள்ஸ் கவர்'' அவர்களின் Folk Song's of South India எனும் நூலே தமிழர்களின் நாட்டாரியல் தொடர்பாய் வெளி வந்த முதல் ஆய்வு நூல் எனலாம். சார்ள்ஸ் கவரைத் தொடர்ந்து பிஷப் கால்ட் வெல் போன்ற மேற்குத் தேய அறிஞர்கள் தமிழரின் நாட்டாரியல் துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்தனர் எனலாம் தமிழர்களில் இத்துறையில் முதன் முதலில் காலடி எடுத்து வைத்தவர் பண்டிதர் திரு. நடேச சாஸ்திரிகள் ஆவர். அவ்ரைத் தொடர்ந்து தமிழகத்தைச் சேர்ந்த கி வா. ஜகநாதன், தி. நா. சுப்ரமணியன் மு. அருணுசலம் பெ. தூரன், அன்னகாமு போன்றேரும் ஈழத்தில் சதா சிவஐயர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க. வித்தியானந்தன், வட்டுக்கோட்டை இராமலிங்கம், F. X. C. நடராசா போன்றேரும் இத்துறையில் அக்கறை காட்டினர். இவர்களுள் பெரும்பாலோர் பேணல் பங்கிலேயே இத் துறையில் ஈடுபட்டனர் எனலாம். இலக்கியங்களை தொகுத்தல், கூத்து போன்ற கலைகளை மீளவும் நடாத்தச் செய்தல் போன்ற முறையில் இவர்களின் பேணல் முயற்சிகள் அமைந்தன. ஆயினும் நாட்டாரியலில் ஆய்வுப் பாங்கான முயற்சியில் ஈடுபட்ட மூலவராய் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களைக் குறிப்பிடலாம். பேராசிரியர் கணபதிப்பிள்ளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் முயற்சிகளை ஒத்ததாகவே பேராசிரியர் வானமாமலை அவர்களின் ஆய்வுப் பணி அமைந்தது எனலாம். பேராசிரியர் கணபதிப் பிள்ளை அவர்களின் வழியில் இந்தியப் பல்கலைக் கழகங்கள் பணியாற்ற வேண்டும் என பேராசிரியர் வானமாமலையவர்கள் விரும்பினார் ஆயினும் பாரம்பரியத்தையும், மரபையும் இறுக்கப்பற்றி நிற்கும் பண்பு கொண்ட இந்தியப் பல்கலைக் கழகங்கள் இத்துறையில் போதிய அக்கறை காட்டவில்லை என்றே கூற வேண்டும். இருப்பினும் பேராசிரியர் வானமாமலை அவர் தமது சொந்த முயற்சிகளின் மூலம் நாட்டாரியல் ஆய்வுகளுக்கு சத்தூட்டினார். இத்துறை சார்ந்து பேராசிரியர் வானமாமலை அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் ஆய்வாளர்களின் கருத்தைப் பெரிதும் கவர்ந்தன. பல்கலைக் கழகங்களுக்கு வெளியே ஒரு நாட்டாரியல் ஆய்வு மையமாக பேராசிரியர் வானமாமலை அவர்கள் செயல் பட்டார். அவரின் ஆராய்ச்சி மையத்தின் களமாக அவரால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி சஞ்சிகை விளங்கிற்று. இருப்பினும் பேராசிரியர் வானமாமலை அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளில் தாற்பரியங்களை விளங்கிக் கொள்ள தமிழ் நாட்டின் பல்கலைக் கழகங்கள் தவறி விட்டன என்றே கூறல் வேண்டும். ஆனால் கர்நாடக, கேரள, பல்கலைக் கழகங்கள் பேராசிரியர் வானமாமலையின் முயற்சிகளை இனங்கண்டு அவற்றிற்கு மதிப்பளித்தன.

பலரும் ஆழ்ந்த கவனிப்புச் செலுத்தாது விட்ட நாட்டார் பண்பாட்டியல் துறையை நவீன கண்கொண்டு செழுமைப்படுத்தியவர் பேராசிரியர் நா. வ. அவர்களே ஆவர். தாம் மட்டும் இன்றி பிறரையும் இத்துறை ஆய்வில் ஈடுபட வைத்துப் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியவர் பேராசிரியர் நா. வ. அவர்களே. தமிழ் நாட்டில் 1968ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடை பெற்ற போது மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் தரும் குறைந்தமையைக் கண்ட பேராசிரியர் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு வழி காட்டும் முறையில் ஆராய்ச்சிக் குழு ஒன்றை அமைத்து செயல்பட வைத்தார்கள். ஐந்து பேரைக் கொண்டு ஆரம்பித்த இக்குழு பிற்காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வாளர்களைக் கொண்டதாக வளர்ந்து பல்துறைப்பட்ட ஆய்வுகளை செய்து வந்தது.

பேராசிரியர் வானமாலவயவர்களின் பணிகளும்பல் துறைசார்ந்ததாக இருந்தது. இலக்கியம், மானிடவியல், நாட்டுப்பண்பாட்டியல், வரலாறு, மொழியியல், கலை அழகியல் ஆகியதுறைகளில் விஞ்ஞான பூர்வமான ஆய்வினை மேற்கொண்டார் கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே என்ற கற்பனார்த்த போக்கைவிடுத்து சமூக பொருளாதார அம்சங்களுடன் காரண காரியத் தொடர்புடன் ஆய்வு நிகழ்த்தியவர். இவரது ஆராய்ச்சிச் சஞ்சிகைபற்றி சோவியத் ஆய்வாளர் துரூப்பிளிக்கோவா குறிப்பிடும் பொழுது ''ஆராய்ச்சி என்ற சஞ்சிகையின் தோற்றம் தென் இந்திய கலாச்சார வாழ்வில் ஒரு பிரதான நிகழ்ச்சியாகும்'' என்று



கூறுகிறார். பேராசிரியர் சா. சிவத்தம்பி பேராசிரியர் வானமாமலை பற்றி குறிப்பிடும் பொழுது.

அ) சொந்த ஆராய்ச்சியின் மூலம் ஏற்படுத்திய கருத்துப் பரவல்

ஆ) 'ஆராய்ச்சி மாணவர் பலரை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஊக்குவித்தமை காரணமாக ஏற்பட்ட கருத்துப்பரவல் இவை இரண்டும் முக்கியம்' என்று கூறுகிறார்.

1959ம் ஆண்டு பேராசிரியர் வானமாமலையவர்கள் நாட்டுப்பண்பாட்டியல் துறையில் ஈடுபடத் தொடங்கினார். பேராசிரியர் ஆற்றிய பணிகளை அவரது ஆராய்ச்சி மாணவன் ஆ. சிவசுப்பிரமணியன் பின் வருமாறு பாகுபாடு செய்கிறார்.

1. நாடோடிப் பாடல்கள் கதைப்பாடல்கள் ஆகியவைகளை சேகரித்து வெளியிடுவது
2. நாட்டுப்பண்பாட்டியல் பற்றிய கட்டுரைகள் எழுதுவது
3. தனக்குக் கிடைக்கும் பிறவாய்ப்புக்களை இத்துறையின் வளாசசிக்குப் பயன்படுத்துவது
4 பிறரையும் இத்துறையில் ஈடுபடச் செய்வது

நாட்டுப் பண்பாட்டியல் துறையின் ஆரம்பமே பேணல் பண்பினையே முதன்மையாகக் கொண்டுள்ளது பேராசிரியர் வானமாமலையவர்கள் இத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பும் இந்தப் பண்படிப்படையிலேயே ஆரம்பமாகிறது. 1960 ஆண்டு தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள் எனும் நாட்டுப் பாடல் தொகுதியினையும் 1964ல் தமிழர் நாட்டுப் பாடல்கள் எனும் தொகுதியினையும் வெளியிட்டார். இத்தொகுதிகள் பற்றி அவருடைய மாணவன் சிவசுப்பிரமணியன் பல தொகுப்பாளர்களிடம் காணப்பட்ட பின்வரும் குறைகள் பேராசிரியரிடம் காணப்படவில்லை என்கிறார்.

1. பாடல்களில் உள்ள கொச்சைச் சொற்களைத் திருத்தி செம்மை மொழியில் வெளியிடுதல்.
2. பாடல் வழங்கும் இடத்தை குறிப்பிடாது விடுதல்.
3. பாடல்களைச் சேகரித்தவர்களின் பெயர்களை வெளியிடாது பிறர் உழைப்பைத் தமதாக காட்டுதல்.
4. பாடல்களுக்குத் தேவையான குறிப்புக்கள் எழுதாது பாடல்களை மட்டும் வெளியிடுதல் அல்லது தேவையற்ற விரிவான பாடலை விடப் பன்மடங்கு நீளமான விளக்கம் எழுதுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் பாடல்களை பாகுபடுத்தும் முறையினை அவர் தனக்கேயுரிய ஆய்வு மனப்பாங்கிலே மேற்கொண்டுள்ளார். நாட்டுப்பாடல்களின் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு அவர் அப்பாடல்களைப் பாகுபாடு செய்துள்ளார்.

நாட்டுப்பாடல்களை வகைப்படுத்த அவற்றின் பொருளே முக்கியம் எனக் கொண்டு அதனடிப்படையிலே பாகுபாட்டினை மேற்கொள்கிருர் கி. வா. ஜகந்நாதன் செய்த நாட்டுப் பாடற் பகுப்பு முறை தர்க்கவியலுக்கு பொருத்தமானதாக அமையவில்லை என்பதையும் அவர் தக்க சான்றுகளுடன் காட்டியுள்ளார். ஆறு அழகப்பனின் நாட்டுப் பாடற் பகுப்பு முறையினையும் இச்சான்றுகள் காட்டி நாம் மறுக்கலாம்.

கட்டன் பொம்மன் கதைப்பாடல் வீணுதி வீணன் கதை என்னுங் கதைப்பாடல்கள் அவர் வெளியிட்டுள்ளார் பேணல் தொண்டினை சிறப்பாக செய்த பேராசிரியர் இத்துறையிலே ஆழமான பரந்த கனமான ஆய்வுத் தொண்டினையும் செய்துள்ளார். அவரது மாணவன் கூறுகிருர்.

> ''சென்னையிலிருந்து வெளியான சரஸ்வதி என்ற பத்திரிகையில் முத்துப்பட்டன் கதை என்ற வில்லிசைக் கதைப்பாடலில் வரலாறு, சமூகவியல் ஆகியவற்றின் பின்னணியில் ஆராய்ந்து தொடர் கட்டுரையாகப் பேராசிரியர் எழுதியுள்ளார். முத்துப்பட்டன் என்ற அந்தண குலத்து இளைஞன் பொம்மக்கா, திம்மக்கா என்ற சக்கிலிய இனச் சகோதரிகளை மணந்து கொண்டு பின் ஒரு போரில் பட்டவ - - ராயன் என்னும் தெய்வமானதைக் குறிக்கும். இக் கதைப் பாடலைப் பற்றிய பேராசிரியர் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்த செக்கோ - - செலோவேக்கிய பேரறிஞர் கமில்ஸ் - - வலபில் செக் மொழியிலும் மொழி பெயர்த்து வெளியிட்டார் ''திறமான புலமையெனில் வெளிநாட்டார் அனத வணக்கம் செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் சொல்லைப் பேராசிரியர் அவர்கள் மெய்பித்து விட்டார்கள்.''

இங்ஙனம் முத்துப்பட்டன் கதையுடன் பேராசிரியரின் நாட்டுப் பண்பாட்டியல் ஆய்வு தொடக்கம் பெறுகிறது. 1965 இல் மலேசியாவில்



நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் Folkmotif in Silappathikaram (சிலப்பதிகாரத்தில நாட்டுப் பாடற் கருப் பொருட்கள்) A study of historical ballads of Tamil land (தமிழகத்தின் வரலாற்றுக் கதைக்ள் பற்றிய ஆய்வு) எனும் கட்டுரைகளை சமர்பித்தார். 1968 இல் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகா நாட்டில் 'நாட்டுக் கதைப் பாடல்களின் மரபுவழி சமூகப் பொருளின் கோலங்கள்' எனும் கட்டுரையைச் சமர்ப்பித்தார். தமிழ் சமூக கதைப்பாடல்களின் பொருளை பேராசிரியர் அவர்கள் பின்வருமாறு வகுத்துக் கூறுகின்றுர்.

1. வேறுபட்ட சாதியாரிடம் தோன்றும் காதல் திருமண உறவுகளால் ஏற்படும் விளைவுகளைக் கூறுவன.
2. தாழ்ந்த சாதியார் மீது உயர்ந்த சாதியார் மேற்கொள்ளும் அடக்குமுறைகள் அவற்றின் விளைவுகள் பற்றியன.
3. தந்தைவழி சமுதாய அமைப்பிற்கும் தாய்வழி சமுதாய அமைப்பிற்கும் இடையே திருமண உறவுகள் நிகழும் போது ஏற்படும் சிக்கல்கள் பற்றிக் கூறுவன
4. பெண்களுக்கு சொத்துரிமை இல்லாமையால் ஏற்படும் விளைவுகளைக் கூறுவன.
5. சாதி, மத கட்டுப்பாடுகளைக் கடந்து நிற்கும் மனிதாபிமான உணர்வுகளைக் கூறுவன.

Woman in tamil folklore (தமிழக நாட்டுப் பாடல்களிற் பெண்கள்) ''கொள்ளைக்காரர்களும் நாட்டுப் பாடல்களும்'' ''வீரத் தமிழ்மகள் வெள்ளையம்மா'' போன்ற பல கட்டுரைகளை அவர் வெளியிட்டுள்ளார். ''உலகப் படைப்புக்கள் கதைகள் பற்றிய ஆய்வு'' ''தமிழ் பண்பாடும் தத்துவமும் போன்ற'' நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறவேண்டும் என்ற விருப்பிலேயே இவரது ஆய்வுமுயற்சிகள் அமைந்திருந்தன.

பேராசிரியர் வானமாமலையின் நாட்டாரியல் முக்கியத்துவத்தைத் - தமிழகம் தற்பொழுது ஓரளவு அங்கீகரித்துள்ளது என்றே சொல்ல வேண்டும் (மதுரைப் பல்கலைக்கழகம் உலகத் தமிழாராட்சி மன்றம்.) ஆனுல் அந்த நாட்டாரியலை பேராசிரியர் அவர்கள் எதற்கு பயன்படுத்த விரும்பினுரோ அந்த முக்கிய அம்சத்தைப் பொறுத்தவரையில் அவரை மரபுவாதிகள் கற்றுக் கொள்ளவில்லை என்றே கூறவேண்டும். நாட்டாரியலுக்கு அடுத்ததாக பேராசிரியர் அவர்களின் ஆய்வுகள் யாவற்றிலும் பயனும் தெளிவுமாக அமைந்த துறைவரலாற்றியல் ஆகும். வரலாற்ருய்வியல் மாற்றத்தை தமிழ் நாட்டில் மாற்றியமைத்துக் கொள்வதற்கு எவையெவை முக்கியமான அம்சங்களோ அவற்றைத்தம் ஆராய்ச்சி சஞ்சிகையில் வெளியிட்டுவந்தார். உண்மையில் ஆராய்ச்சி இதழ்களை ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது இவ்வுண்மை தெளிவாகப் புலனுகிறது.

தமிழ் நாட்டின் வரலாற்றியலில் புதிய நோக்குத்தேவை என்பதும், அந்தப் புதிய நோக்கு எப்படி அமைய வேண்டும் என்பதைப் பற்றியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966 இல் வெளிவந்த தமிழர் வரலாறும் பண்பாடும் என்ற நூலில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். இந்நூலில் 122 வது பக்கத்தில் சிற்சில அரசர்கள், கவிஞர்கள், போர்வீரர்கள், அமைச்சர்கள் ஆகியோரது வாழ்க்கைக் குறிப்புக்கள் தான் தமிழ் நாட்டின் உண்மையான சரித்திரமா? தமிழ் நாட்டின் சமுக வாழ்க்கையையும் பண்பாட்டையும் இலக்கிய வளத்தையும் கலைச்செல்வத்தையும் பிரதிபலிப்பவர்கள் மேற்படி குறிப்பிட்ட நூற்றுக்கணக்கான புகழ்பெற்ற மனிதர்கள்தானு? என்ற கேள்வியை எழுப்பிவிட்டு தமிழ் நாட்டு வர்லாறுபற்றி எழுதியவர்களின் பல ஆக்கங்களை விரிசலாக ஆராய்கிறுர். ஆங்கில நாகரிகத்தின் மேன்மை, தமிழ் நாட்டில் அந்த நாகரித்தின் முகவர்களாய் இருந்த பிராமணர்களின் முக்கியத்துவம், திராவிட உயர் சாதியினர் ஆகிய இவ்விரண்டு வர்க்கத்தாரின் போக்கிலேயே தமிழ் நாட்டின் வரலாறு பார்க்கப் பட்டது என்பதை விளக்கிவிட்டு இந்த தன்மையிலிருந்து விடுபட்டு வரலாற்றை உண்மையில் புரிந்து கொள்வதற்கு தமிழ்நாட்டு சமுதாய வளர்ச்சியையும் பிற இனங்களோடு தமிழர் சமுதாயம் கொண்ட தொடர்பினையும் காண வேண்டும் என்கிறுர் பேராசிரியர் ந. வ.

ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது தமிழர் சமூகப் பண்பாட்டுத்துறை ஆய்வு முயற்சிகளில் நவீனத்துவத்தைப் புகுத்தியவர் பேராசியர் அவர்களே. பேராசிரியரைப் பற்றிக் குறிப்பிட்ட பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்.

> ''சோழப் பேரசின் உத்தியோகபூர்வமான
> சன்னதம் பெற்ற கவிச்சக்கரவர்த்திகளான
> ஒட்டக்கூத்தர், ஜெயங்கொண்டார்
> ஆகியோர் பெயர்களோடல்லாது அப்
> பட்டத்தை உத்தியோக பூர்வமாகப்
> பெருத கம்பனுடைய பெயருடனேயே
> கவிச்சக்கரவர்த்தி என்னும் விருது நாமம்
> சேர்த்துப் பேசப்படுவதுபோல் நா. வானமாமலை
> அவர்களும் உத்தியோக ரீதியில் தமிழ்நாட்
> -டின் பல்கலைக் கழகங்களிலோ, பல்கலைக்
> கழகக் கல்லூரிகளிலோ பேராசிரியராக்
> விளங்காவிடினும் பேராசிரியர் என்ற
> அடை அவர் பெயருடன் மதிப்பார்த்
> -தத்துடன் இணைக்கப்பட்டுள்ள'' என்கிறுர்.

தமிழர் சமூக வரலாற்றையும் அவ்வரலாற்றில் நாட்டார் கலைகளும், பாரம்பரியங்களும் பேணப்பட வேண்டிய முக்கியத்துவத்தையும், ஆய்வு செய்யப்பட வேண்டிய அவசியத்தினையும் வலியுறுத்தி பிற்காலத்தில் வளமான ஓர் ஆய்வியற் துறை தமிழில் வளர்வதற்கு காரண காரிய கருப்பொருளாக அமைந்தவர் பேராசிரியர் வானமாமலை அவர்களே.




அலங்காரம் மிக்க
ஆடை துணி
வகைகளுக்கு
அலங்கார்ஸ்
உங்கள்
குடும்ப விழாக்களில்
நினைவில்
நிற்கவேண்டிய இடம்
**அலங்கார்ஸ்**
இல. 14, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

'சியாமஸ்'
உங்களுக்குத் தேவையான
எல்லா விதமான
புடவை வகைகளுக்கும்
சிறந்த இடம்
நம்பிக்கையான
சேவைக்கு
**சியாமஸ்**
இல. 33, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

பல் சுவை சிற்றுண்டிகள்
சுவைமிகு
குளிர்பானங்கள்
மட்டுநகரில் சிறந்த இடம்
**றியோ**
**கிறீம் ஹவுஸ்**
இன்றே நாடுங்கள்:
இல. 14, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

சிறந்த ஜவுளி வகைகளைத்
தெரிவு செய்ய
மீண்டும் மீண்டும்
உங்களை அழைக்கிறது
**ரெமி**
**டெக்ஸ்டைல்ஸ்**
இன்றே விஜயம் செய்யுங்கள்:
இல. 3, முனைத்தெரு,
மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரீக உடைகளுக்கான
நல்ல தரமிக்க துணி வகைகளுக்கும்,
தைத்த ரெடிமேட் ஆடை வகைகளுக்கும்,

# வசந்த மாளிகை

ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர்
எல்லோரின் தரமான தேர்வுகளுக்கும்

சிகரமாய் விளங்குவது

## வசந்த மாளிகை

இல. 42, பிரதான வீதி, மட்டக்களப்பு.

---

பரவசமூட்டும் பல்வகை வண்ணங்களில்
அழகிய கலை மணம் கமழும்
பட்டு, பருத்தி, ரெடிமேட் ஆடைகள்
பண்டிகைக் காலங்களில்
சகாய விலையில் விற்பனை செய்யும்
ஒரே ஸ்தாபனம்

# நியூ மர்ழியாஸ்

வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள்.
இன்றே விஜயம் செய்யுங்கள் !

இல. 44, பிரதான வீதி, மட்டக்களப்பு.

065 - 2900

---

★ மாணவர்களின் தேவைகள்!
★ இலக்கிய இரசிகர்களின் தேவைகள்!
★ சினிமாப் பிரியர்களின் தேவைகள்!
★ அலுவலகங்களின் தேவைகள்!
இவை அனைத்திற்கும் ஒரே இடம்

# யாதவன்ஸ் புத்தக நிலையம்

இந்திய இலக்கிய சினிமாச் சஞ்சிகை இங்கே கிடைக்கும்.
பிறந்த நாள் வாழ்த்து மடல், மற்றும் பல் வகையான
அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களும் விற்பனைக்கு உண்டு.

இல. 20, மத்திய வீதி - மட்டக்களப்பு.

---

22 கரட் நம்பிக்கையான நகைகளைப் பெற
இன்றே நாடுங்கள்

# உதயா நகை மாளிகை

நாணயம்! நேர்மை!!
எங்கள் நாளாந்த சேவை
அழகிய கலை நுணுக்க ஆபரணங்களுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்.

39, பிரதான வீதி, — மட்டக்களப்பு.
தொலைபேசி: 2619.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பின் வெளிவாரி பட்டப்படிப்பிற்கு
அரும்பெரும் சேவையாற்றும் ஓரேயொரு நிறுவனம்

# விபுலானந்தா

## வெளிவாரி

## பட்டப்படிப்புகள் கல்லூரி

**G. C. E. (A/L)** கலை / வர்த்தகம்

**G. A. Q.**

**B. A.**

வகுப்புகள் நடைபெறுகின்றன.

தொடர்பு :

30, பயனியர் வீதி,

மட்டக்களப்பு.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு புனித செபஸ்தியான் அச்சகத்தில் அச்சிட்டு
வயல் ஆசிரியர் குழுவினரால் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org